REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 335 ஐப்பசி 15 ஆம் நாள் சனிக்கிழமை 31 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## தொற்றாளர் மூவர் பொலநறுவைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 31
வடமராட்சியில் தொற்றுடன் இனங் காணப்பட்ட மூவரும் நேற்று இரவு சிகிச்சைக் 18

## கொழும்பில் கொரோனா அகோரம்!

கொழும்பு, ஒக். 31
கொழும்பு மாநகர சபை பிரதேசங்களுக்குள் மாத்திரம் கடந்த 8 நாள்களில் ஆயிரத்து 150 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாநகர மேயர் 18




# வடக்கில் 8 பேருக்கு தொற்று!

- புங்குடுதீவில் இருவர்
- உடுவிலில் இருவர்
- வேலணையில் ஒருவர்
- நல்லூரில் ஒருவர்
- முல்லைத்தீவில் இருவர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 31
வடக்கு மாகாணத்தில் நேற்று எண்மருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புங்குடுதீவு, வேலணை, உடுவில், நல்லூர் ஆகிய இடங்களிலும், முல்லைத்தீவிலும் தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட் டுள்ளனர். 18

## கர்ப்பிணி பெண்ணுக்கே உடுவிலில் கொரோனா!

### 2 வயது மகனும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
கர்ப்பிணித் தாய் ஒருவரும், அவரது 2 வயது மகனுமே உடுவிலில் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். இவரது கணவர் பேலியகொடவில் மொத்த விற்பனை நிலையம் ஒன்றை வைத்துள்ளார். இவர்கள் மாளிகாவத்தையில் தங்கியிருந்த 18

## முல்லை. தொற்றாளர் 2 நாள்கள் நடமாட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 31
முல்லைத்தீவில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் பேலியகொட சென்றுவந்த இரு நாள்களின் பின்னரே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அதனால் அவர் நடமாடிய இடங்கள் தொடர்பாகத் 18

## தொற்றாளரோடு தொடர்பானோர்: இனங்காண நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31
புங்குடுதீவில் தொற்றுடன் இனங் காணப்பட்டவரிடம் தொடர்பைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக் 18

## கொரோனாத் தொற்று அச்சம்; 750 தட பஸ் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 31
பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பஸ்களும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 19

## யாழ்ப்பாணத்தில் கடும் கட்டுப்பாடு!

### கொரோனாத் தொற்றை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்ப்பாண மாவட்ட கொரோனா ஒழிப்புச் செயலணியின் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில முடிவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவது என்றும் சில முடிவு 18

## மின்னல் தாக்கி தம்பதியர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 31
விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கணவனும், மனைவியும் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம 18

## கொரோனா 10,000 +

### நேற்று 633 பேர்

கொழும்பு, ஒக். 31
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அசுர வேகத்தில் அதிகரித்து வருகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. 18

## 68 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு தொடர்கிறது!

### 49 பிரிவுகளில் திங்களன்று தளர்வு

கொழும்பு, ஒக். 31
நாட்டில் தற்போது 117 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 5 மணிவரை ஊரடங்கு உத்தரவு தொடரும் என 19

## யாழ்ப்பாணம் வருவோருக்கு அவசர அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்ப்பாணத்துக்கு மேல் மாகாணத்தில் இருந்து வரும் அனைவரும் வீடுகளில் தம்மை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார். வெளி மாவட்டங்களில் 19

# ஈழத்தமிழர் பிரச்சினைக்காக அமெ.வாய் திறக்கவேண்டும்

## ஈ.சரவணபவன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31

**இந்தோ– பசுபிக் பிராந்திய நலன்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ ஜனாதிபதி கோத்தாபயவுடன் கலந்துரையாடினாரே தவிர, தமிழ் மக்களின் அரசியல் விடுதலை குறித்த எந்தவொரு வார்த்தைகளையுமே அவர் வெளியிடவில்லையென தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் இறைமை தொடர்பாக அக்கறையோடு கருத்து வெளியிட்ட மைக் பொம்பியோ, ஈழத் தமிழர்களின் 70 ஆண்டுகால அரசியல் போராட்டத்துக்கான நிரந்தரத் தீர்வு என்ன என்பது பற்றியும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றமை தொடர்பாகவும் எதுவுமே கூறவில்லை.

2012ஆம் ஆண்டு ராஜபக்ச அரசுக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைச் சபையில் பிரேரணையைச் சமர்ப்பித்து பொறுப்புக்கூறல், மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாகக் கடுமையான அழுத்தங்களையும் எச்சரிக்கைகளையும் இலங்கை மீது பிரயோகித்த அமெரிக்கா, தற்போது அது தொடர்பாக வாய்திறப்பதேயில்லை. ஜெனிவா மனித உரிமைச் சபையில் இருந்து ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்கா வெளியேறியதை சாதகமாகப் பயன்படுத்தியே இலங்கை அரசு, ஒற்றையாட்சி அரசமைப்பை மேலும் உறுதிப்படுத்தி, போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பங்கீடு பற்றிய பேச்சுக்களில் இருந்து துணிவோடு விலகி நிற்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் கொழும்புக்கு வருகை தந்த மைக் பொம்பியோவும் ராஜபக்சக்களின் அரசை மேலும் நியாயப்படுத்தி, அவர்களோடு அன்பாகவும் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். ஆனால் சீனாவை மிரட்டியிருக்கிறார்.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் கூறியதுபோன்று, அமெரிக்கா இரட்டை வேடம் போடுகின்றதா என்ற கேள்வியும் எழாமலில்லை. அதாவது சிங்களவர்களுக்கு ஒரு முகத்தையும் தமிழர்களுக்கு வேறு முகத்தையும் அமெரிக்கா காண்பிக்கின்றது. முடிந்தவரை இலங்கை ஒற்றையாட்சி அரசுடன் இணங்கிச் சென்று இலங்கை கேட்கும் அனைத்து விடங்களுக்கும் ஒப்புக்கொண்டு, செயற்படவே அமெரிக்கா முற்படுகின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் ஈழப்போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் இந்தோ பசுபிக் பிரந்தியத்தில் இலங்கையின் துணையோடு சீனா மேற்கொண்டு வரும் ஆதிக்கத்துக்கான காரணங்கள் அமெரிக்காவுக்குப் புரியாததல்ல.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தடையின்றி ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால், அமெரிக்கா, ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை முன்வைப்பதற்கான அழுத்தங்களையும் கால அவகாசத்தையும் இலங்கை மீது திணிக்க வேண்டும்.

மாறாக தமிழ் மக்களுக்காகப் பேசி இலங்கையின் கோபத்தைச் சம்பாதிக்கக் கூடாதென்ற சிந்தனைப் போக்கில் செயற்படுவதை அமெரிக்கா தவிர்க்க வேண்டுமெனவும், என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ.இ)

---

## பெருமாள்கோவிலில் சுமங்கலி பூசை இன்று இரத்து

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் வண்ணை சிறி வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று நடைபெறவிருந்த சுமங்கலி தீப பூசை நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கோவில் நிர்வாகம் தெரிவித்தது. (கு)

---

## 40 தென்னைகளை நாசமாக்கிய யானை

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி– பூநகரி கவாக்குளம் கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானை பயன்தரும் 40 தென்னைமரங்களை நாசமாக்கியுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

எமது பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையிலும் பௌஷர் மூலமாகவே தண்ணீர் எடுத்துவந்து தென்னம் கன்றுகளுக்கு ஊற்றி வளர்த்திருந்தோம். அவை பயன்தர ஆரம்பித்துள்ள நிலையில் யானை நாசமாக்கியுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கு-113)

---

கிளிநொச்சி மாயவனூரில்

## இரண்டு குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி மாயவனூர் பகுதியில் இரண்டு குடும்பங்கள் சுகாதாரப்பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தக் குடும்ப அங்கத்தவர்கள் கொழும்பில் கொவிட் 19 பரவக்கூடிய பகுதியுடன் தொடர்புபட்டிருந்தமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

மாயவனூர் பகுதியைச் சேர்ந்த தாயும் மகளும் கொழும்புக்குச் சென்றுவந்ததையடுத்து, அவர்களின் வீட்டிலேயே அந்தக் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்தவர், கொழும்பில் பணிபுரிந்தநிலையில், மாயவனூர் பகுதியிலுள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளார். கொரோனா தொற்றைத்தடுக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக அந்தக் குடும்பத்தினரையும் அவர்களின் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தக் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள விடயம் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் அந்தப் பகுதியில் எச்சரிக்கை விளம்பரம் ஒட்டப்பட்டுள்ளது. (கு-ரி1)

---

## ஊரடங்கில் திருமணம்

### பொலிஸ் சட்ட நடவடிக்கை



கொழும்பு, ஒக். 31

கொழும்பு – கொள்ளுப்பிட்டி பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி நடத்தப்பட்டதாகக் கூறப்படும் திருமண நிகழ்வு தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி காலி முகத்திடலில் அமைந்துள்ள நட்சத்திர ஹொட்டலொன்றில் நேற்றுக்காலை திருமண நிகழ்வொன்று நடைபெறுவதாகக் கிடைத்த தகவலுக்கமைய அங்கு சென்றபோது, 35 பேர் திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை தெரியவந்துள்ளது. இதனடிப்படையில், குறித்த ஹொட்டலின் முகாமையாளர் மற்றும் திருமண நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைளெடுக்கப்படவுள்ளது என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (கு-ரி4)

---

## கொழும்பிலிருந்து வெளியேறியோர் பொறுப்பில்லாது நடந்துகொண்டனர்

### சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் கடும் கண்டனம்

### அவர்கள் வீடுகளில் முடங்கவேண்டும் என்றும் பணிப்பு

கொழும்பு, ஒக். 31

மேல் மாகாணத்திலிருந்து எவரும் வெளியேற வேண்டாம் என்று தொடர்ச்சியாக நாம் வலியுறுத்தியும் ஒரு சிலர் பொறுப்பில்லாது வெளியேறியுள்ளனர். இவர்கள் பொறுப்பில்லாத நபர்கள் என்றே வெளிப் படையாகக் கூறுகின்றேன். இவர்களது செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது என்று சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கண்டனம் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அவர்கள் எங்கும் நடமாடாது தத்தம் வீடுகளில் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல் மாகாணத்துக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்படும் என ஆரம்பத்தில் முன்னெச்சரிக்கை விடுத்ததானது எவரும் வெளியேற வேண்டும் என்பதற்காகவோ அல்லது சுற்றுலா செல்ல வேண்டும் என்பதற்காகவோ அல்ல.

மேல் மாகாணம் அதிக அச்சுறுத்தலான மாகாணமாக கருதியதன் காரணத்தால் இங்குள்ள எவரையும் வெளியேறக்கூடாது என்பதற்காகவே நாம் அவ்வாறு மூன்று தினங்களுக்கு ஊரடங்கைப் பிறப்பித்தோம். ஆனால் நேற்று (நேற்றுமுன்தினம்) பலர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தை விட்டு வெளியேறியுள்ளனர். மேல் மாகாணத்தை விட்டு எவரும் வெளியேற வேண்டாம் என நாம் தொடர்ச்சியாகக் கூறியும் இவர்கள் வெளியேறியுள்ளனர். இதற்குப் பின்னர் அவர்கள் மீண்டும் மேல் மாகாணத்துக்கு வந்து தமது பாதுகாப்பை எதிர்பார்த்து எம்மிடம் வர வேண்டாம். நடைமுறைச் சிக்கல் என்ன என்பதை மக்கள் உணர வேண்டும். இதனையே நாம் தொடர்ச்சியாகக் கூறிவந்தோம். இங்கிருந்து வேறு பிரதேசங்களுக்கு செல்லும் நபர்கள் வெளி பகுதிகளுக்கும் நோயைப் பரப்பவே செய்துள்ளனர். இது பொறுப்பில்லாத செயற்பாடு. என்றார். (கு-இ)

# கடற்பெருக்குத் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை

## பேராசிரியர் சூசைஆனந்தன் விளக்கம்

**யாழ்ப்பாணம், ஒக். 30**

**சந்திரன் புவியை நீள்வட்டப் பாதையில் சுற்றிவரும் போது சில காலங்களில் புவிக்கு அண்மையாகவும் சில காலங்களில் தொலைவாகவும் அமையும். தற்போது புவிக்கு அண்மையாக சந்திரன் இருப்பதால், பௌர்ணமி தினத்துக்கு இரண்டு நாள்கள் முன்னரும், இரண்டு நாள்கள் பின்னரும் கடல் நீர் தாழ்வான பகுதிகளுக்குள் ஊடறுத்துச் செல்லும். இது தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவித்தார்.**

பூநகரி பிரதேசத்தில் கடந்த மூன்று நாள்களில் மூன்று கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தின் கல்லுண்டாய் மற்றும் தீவுப் பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்துள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாதாரணமாக கரையோரங்களில் ஒரே நாளில் இரு கடற் பெருக்குகளும், இரு தாழ்வுகளும் ஏற்படுவது வழமை. சூரியன், சந்திரன், புவிக்கு இடையேயான ஈர்ப்பு விசையே இதற்குக் காரணம். சந்திரன் புவிக்கு அண்மையில் இருப்பதால் சூரியனை விட அதிக ஈர்ப்பு சக்தி கொண்டதாக அமையும். சாதாரண நாள்களில் இடம்பெறும் வற்றுப்பெருக்கை விட பௌர்ணமி, அமாவாசை நாள்களில் இடம்பெறும் வற்றுப்பெருக்கு அதிகமாகவே இருக்கும். சூரியன், சந்திரன் மற்றும் புவி ஆகிய மூன்றும் இந்த தினங்களில் பெரும்பாலும் ஒரே நேர்கோட்டில் அமைவதால் இந்த நிலைமை ஏற்படுகின்றது. அமாவாசை, பௌர்ணமி நாள்களில் ஏற்படும் வற்றுப்பெருக்கு மிகவை வற்றுப்பெருக்கு என்று கூறுவார்கள். சந்திரன் புவியை நீள்வட்டப் பாதையில் சுற்றிவரும் போது சில காலங்களில் புவிக்கு அண்மையாகவும் சில காலங்களில் தொலைவாகவும் அமையும். அண்மித்து அமைவதை 'பெரிஜி' நிலை எனவும், சேய்மையில் அமைவதை 'அபாஜி' நிலை என்றும் அழைப்பர். இப்போது சந்திரன் 'பெரிஜி' நிலையில் இருப்பதால் பௌர்ணமி தினக் காலப் பகுதியில் வழமைக்கு மாறாக உயர்வான பெருக்கு ஏற்படும். அத்துடன் காற்றின் வேகம், அமுக்க வேறுபாடுகள் கடல்நீர் தாழ்வான பகுதிக்குள் ஊடறுத்துச் செல்வதற்கு வழிவகுக்கும். இப்போது பூநகரி, கல்லுண்டாய், தீவுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள நீர் உட்புகுதல் நிகழ்வு 'பெரிஜி' நிலையில் அமைந்த பெருக்கு ஆகும். இது எல்லாக் காலங்களிலும் ஏற்படாது. இதனால் அச்சுறுத்தல் இல்லை என்பதுடன் மக்கள் அச்சமடையத் தேவையில்லை, என்றார். (ஒ.5)

பெரிஜி மிகவை வற்றுப்பெருக்கு




முழுமதி / பௌர்ணமி தினம்
இருள்மதி / அமாவாசை

# முடக்கத்தை மீறினர் இராஜ கிராமத்தவர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 31

கரவெட்டி இராஜகிராமம் பகுதி தனிமைப்படுத்தப்பட்டு இறுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அந்தப் பகுதி மக்களின் நடமாட்டம் பருத்தித்துறை நகர்ப் பகுதிகளில் காணப்படுகின்றது என்று குற்றஞ் சுட்டப்படுகின்றது.

பேலியகொட மீன்சந்தைக்குச் சென்றுவந்த கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த நபருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர்.

இராஜகிராமத்தில் இறுக்கமான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பலரும் பருத்தித்துறை நகர்ப்பகுதிகள் உள்ளிட்ட பல இடங்களில் நேற்று நடமாடியதைக் காணக்கூடியதாக இருந்தது. இதேவேளை கரவெட்டிப் பகுதியில் இருந்து வெளியேறி சாவகச்சேரிக்குச் சென்ற பெண்ணால் நேற்று அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. பேலியகொட மீன்சந்தைக்குச் சென்றுவந்த கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த சாரதியொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து கரவெட்டி இராஜகிராமம் முடக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கரவெட்டியில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஒரு பெண் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புக்கு சென்றுள்ளார். இதையடுத்து மக்கள் பதற்றமடைந்தனர். அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து குறித்த பெண் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் இருந்து வரவில்லை என்று தெரியவந்ததை அடுத்து அந்தப் பகுதியில் இயல்பு நிலை திரும்பியது. (ம-9)

# நவம்பர் 9ஆம் திகதி பாடசாலை ஆரம்பம்?

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பரிசீலனை மேற்கொள்வதற்காக சுகாதாரப் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார அணுகுமுறைகள் குறித்த எழுத்து மூல பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில் இணையவழிக் கற்பித்தல் தொடர்பான மேற்பார்வை ஒன்றை செய்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இன்மை காரணமாக இந்த மேற்பார்வையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-இ)

# தொற்றாளர்கள் அதிகரிப்பு; ஆபத்துநிலை நீங்கவில்லை

### *சுகாதார அமைச்சு எச்சரிக்கை*

கொழும்பு, ஒக். 31

'கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது. எனவே, அடுத்து வரும் நாள்கள் அவதானம்மிக்க காலப்பகுதியாகும். கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக நாட்டு மக்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்' என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவ நிபுணர் ஜயருவன் பண்டார நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எமக்கு முன்னால் பெரும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அது இன்னும் குறையவே இல்லை. நாளாந்தம் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றது. இதனால் எதிர்காலம் என்பது அவதானம்மிக்க காலப்பகுதியாகும். கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக சுகாதார தரப்பினரும், பாதுகாப்பு துறையினரும் முழுவீச்சுடன் செயற்பட்டுவரும் நிலையில் அதற்கு மக்களும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தமக்கு கொரோனா தொற்றாத வகையில் சுகாதார பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன், மற்றையவருக்கு எம்மூலம் தொற்றாமல் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். தற்போது நாளாந்தம் 7 ஆயிரம் வரையில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயலிழந்துள்ள இயந்திரமும் சரிசெய்யப்படும். சீனாவில் இருந்து துறைசார் நிபுணர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உங்களினதும், உங்கள் உறவினரது நலன்கருதியுமே தனிமைப்படுத்தல் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

தனிமைப்படுத்தல் முகாமில் அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குச் செல்வதற்கு எவரும் அச்சம் கொள்ளவேண்டியதில்லை' என்றார். (ம-44)

# வவுனியாவில் 24 பேருக்கு கொரோனா

வவுனியா, ஒக். 31

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 24 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர்களின் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் கிடைத்துள்ளன. இதன்போதே மேலும் 24 பேருக்குக் கொரோனாத் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-ரி3)

# 1500 ஊழியர்களுடன் பணியாற்றியவருக்கு கொரோனா

காலி.ஒக்.31

காலி. கொக்கலைப் பகுதியிலுள்ள 1,500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றும் பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று காலி மாவட்ட பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் வேணுரா கே. சிங்கராச்சி தெரிவித்தார்.

இவர்களுடன் தொடர்புகளைப் பேணிய ஏனைய ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பி.சி.ஆர். சோதனை முடிவுகள் வெளியாகும் வரை , அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (க-இ)

# சந்தை, இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடுவதில் சிக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.31
சந்தைகள் மற்றும் மாட்டிறைச்சிக்கடைகள் போன்றவற்றை அடுத்த வருடம் குத்தகைக்கு விடுவதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.
உள்ளூராட்சி சபைகள் தமது அடுத்த வருடத்திற்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்போது சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும் நிதிகளைச் சபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றன.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று மற்றும் ஊரடங்கு பிறப்பிக்கப்படும் வேளைகளில் சந்தை திறக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மூடப்படும் காலத்திற்கு உள்ளூராட்சி சபைகளால் கழிவு கொடுக்கப்பட்டாலும் இலாப நோக்குடன் சந்தைகளை குத்தகைக்கு எடுப்போர் இவ்வாறு மூடப்படும் அபாயம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக சந்தையைக் குத்தகைக்கு எடுக்கத் தயங்குகின்றனர். மேலும் மாடுகள் வெட்டுவதற்கு அரசால் தடை செய்யப்பட்டுள்ளதால், மாட்டிறைச்சி விற்பனை செய்யும் கடைகளை குத்தகைக்கு எடுக்கவும் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் அடுத்த வருடத்திற்கு சந்தைகள் மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்போர் தயக்கம் காட்டி வருகின்றனர். தற்போது உள்ளூராட்சி சபைகளால் சந்தைகள் இறைச்சிக் கடைகள் போன்றவை குத்தகைக்கு விடுவது தொடர்பான கேள்விகள் கோரப்பட்ட போதிலும் கோழி இறைச்சி விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனையவற்றை கேள்வி கோர எவரும் முன்வரவில்லை. இதனால் மீள் கேள்வி கோரப்படும் நிலைக்கு உள்ளூராட்சி சபைகள் தள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-9)

# அமெரிக்காவின் பிடியிலிருந்து கோத்தா அரசு தப்பவே முடியாது

## அழுத்திக் கூறுகிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஒக்.31
**பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்த வரைக்கும் அதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதைத்தான் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசிடம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியா நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்துரைத்துவிட்டுச் சென்றுள்ளார். எனவே, ஐ.நா. தீர்மானத்தை முன்வைத்த அமெரிக்காவின் இந்தக் கோரிக்கையை அரசு நிராகரிக்க முடியாது. அதை நிறைவேற்றும் கடமையிலிருந்து இந்த அரசு விலகவும் முடியாது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
இது தொடர்பில் இரா.சம்பந்தன் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:
பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்யக்கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டு சர்வதேச நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்திலுள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான வகையில் இலங்கை அரசு செயற்பட வேண்டும். இதைத்தான் இலங்கை வந்து சென்றுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசிடம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார். எனவே பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்த வரைக்கும் அதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றார். (ப-22)



மட்டு. மாவட்டத்தில்

# மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிப்பு

மட்டக்களப்பு, ஒக்.31
பேலியகொட மீன்சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையை மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.
இதனால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல முடியாமல் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மாவட்டத்தில் சுமார் 25, 000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு, பூநொச்சிமுனை, காத்தான்குடி, நாவலடி, கதாவளை, உட்பட பல பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான மீனவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். பிடிக்கின்ற சொற்ப மீன்களையும் விற்பனை செய்ய முடியாமல் அவதியுறுகின்றனர் எனவும் இதனால் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ப)

# அரசின் பங்காளிகளுக்கு பாரதூரமான அநீதியாம்

## குமுறுகிறார் விஷ்ணுகாந்தன்

மட்டக்களப்பு, ஒக்.31
ஒரு இலட்சம் இளையோருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் என். விஷ்ணுகாந்தன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாமும் ஆளும் அரசாங்கத்தின்பங்காளிக்கட்சியினர். எம் போன்ற பங்காளிக் கட்சியினரின்பேராதரவுடனேயே ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் மகத்தான வெற்றி ஈட்டி பொதுஜன பெரமுன ஆட்சி அமைத்துள்ளது. நாம் எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தி முன்வைத்த வேண்டுகோள்களை அவர்கள் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிகளாகப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஆதரவு வழங்கியிருந்தோம். இதில்ஒன்றாகஅரசாங்க தொழில்துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றபோது எமக்கு நியாயமான ஒதுக்கீடுகளை மேற்கொண்டு தர வேண்டும் என்று கேட்டிருந்தோம். -என்றார். (ப)

# தமிழ்த் தேசிய அரசியலை நசுக்கும் செயற்பாடு தீவிரம்

## கலையரசன் எம்.பி. தெரிவிப்பு

பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை நசுக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.
திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சங்கமன்கண்டிக் கிராமத்தில் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் அடக்குமுறையை எதிர்த்து அரசியல்செய்ய வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையில் இளைஞர் அமைப்புகளும் ,பொது மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். கடந்த காலத்தில் தமிழ்க் கிராமங்கள் அபிவிருத்தியில் பின்னோக்கி, புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள சூழலில் தற்காலத்தில் எமது மக்களுக்கு பல அபிவிருத்தியை மேற்கொள்ள தடைகள் எழுகின்றன. பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்- என்றார். (ப)



# 12 சுகாதாரப் பரிசோதகர்கள் 'அப்பாச்சி' யைப் பெற்றனர்

வவுனியா, ஒக்.31
கொவிட் -19 தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை துரிதப்படுத்தும் முகமாக வவுனியா மாவட்ட சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டர் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.
கொவிட்-19 நோய்த் தொற்றைத் தடுக்கும் வகையில் தமது உயிரைப் பணயம் வைத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதர்களில் வவுனியாவில் தெரிவுசெய்யப்பட்ட 12 சுகாதாரப் பரிசோதகர்களுக்கே இவ்வாறு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.. 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பாச்சி ரக மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு வழங்கப்பட்டன. (ப-18-ரி3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒரு குடம் பாலும் ஒரு துளி கொரோனாவும்

நாளொரு தொற்றும் பொழுதொரு முடக்கமுமாக, நாட்டில் கிளிநொச்சி தவிர்ந்த சகல மாவட்டங்களிலும் தன் கோரமுகத்தைக் காட்டி பல்லிளிக்கத் தொடங்கியுள்ளது கொரோனா. எங்கும் கொரோனா பற்றிய அச்சமே தலைவிரித்தாடுகின்றது. ஆனால் அரசோ கூலாக 'இன்னும் சமூகத் தொற்று ஏற்படவேயில்லை" என வீம்புக்கு பிடிவாதம் பிடிக்கின்றது.

இந்தப் பிடிவாதத்துக்கு, அரசியல்,, பொருளாதாரக் காரணிகள் இருக்கக்கூடும். ஆனால் அதற்காக இருக்கின்ற ஒன்றை இல்லாததாக்கி மக்களின் உயிருடன் அரசு விளையாடிக் கொண்டிருக்கிறது. சமூகத் தொற்று என ஒத்துக்கொண்டால், நாட்டை முடக்க வேண்டியிருக்கும். அப்படி முடக்கினால் பொருளாதாரம் இன்னும் சரியும். பொருளாதாரம் சரிந்தால் விலைவாசி ஏறும். விலைவாசி ஏறினால் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரிக்கும். அப்படி நடந்தால் அது அரசு மீது கோபத்தை உண்டாக்கி அடுத்த தேர்தலில் ஆப்படிக்கும். இப்படியெல்லாம் கணக்குப் போட்டே சமூகத் தொற்றை மூடி மறைக்க, கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்படும் பகுதிகளை மட்டும் தனிமைப்படுத்தும் வேலை நடக்கிறது.

ஆனால் இப்படி குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் முடக்குவது அல்லது தனிமைப்படுத்துவது என்பது கொரோனாவைக் கட்டுப்படுத்த பொருத்தமான வழியா? என்று கேட்டால், பதில் இல்லை என்பதாகவே இருக்கும். ஏனெனில் இப்போது கொரோனா தெட்டம் தெட்டமாகவே பரவியுள்ளது. அதனால் ஒவ்வொரு இடமாகச் சுற்றிவளைத்து, இராணுவத்தையோ, பொலிஸையோ நிறுத்தி அவர்கள் வெளியேறாதவாறு கண்காணிப்பதென்பது நடைமுறைக்குச் சாத்தியமில்லை. இப்படித்தான் யாழ்ப்பாணம், வடமராட்சியில் இராஜகிராமம் என்ற பகுதி, கொரோனாத் தொற்றாளரொருவர் இனம் காணப்பட்டதால் நேற்றுமுன்தினம் முதல் தனிமைப்படுத்தப்பட்டது. ஆனால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பலர் நேற்றைக்கு வழக்கம் போல தங்கள் வேலைகளுக்காக வெளியிடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். ஒருவேளை, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இன்னும் சிலருக்கு கொரோனா தொற்றியிருந்தால், இப்போது அவர்கள் வெளியேயும் சென்றிருந்தால், புதிய கொரோனாக் கொத்தணி ஒன்று விரைவில் உருவாகக்கூடும். இதுவே தனித் தனியாக சில பகுதிகளைத் தனிமைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்.

ஆனால் ஒட்டுமொத்த நாட்டையும் முடக்கினால் கண்காணிப்பது இலகு. கொரோனாத் தொற்றுக்குள்ளான பகுதிகள் தவிர்ந்த, ஏனையோரின் தேவையற்ற நடமாட்டமும் கட்டுக்குள் கொண்டுவரப்படுவதால், சில வாரங்களில் கொரோனாவின் பரம்பலைக் குறைக்க முடியும். ஆனால் அப்படியான நிலைக்குப் போக அரசு இன்னமும் தயக்கம் காட்டுகின்றது. போதாக்குறைக்கு 'சமூகத் தொற்று இல்லை' தான் சொல்வதை நம்பவைப்பதற்காக, பாடசாலைகளைத் திறப்பது பற்றி அறிக்கை வேறு கேட்டிருக்கிறது. நாடே கொரோனாவில் சிக்கித் தவிக்கையில், இப்போது பாடசாலைகளைத் திறந்து கொரோனா இலகுவாகப் பரவ அரசே வழி செய்து கொடுக்கப்போகின்றதோ என்ற சந்தேகமும் எழுகின்றது.

வடக்கில் நேற்றும் புதிய கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இப்போது கிளிநொச்சி மட்டுமே கொரோனாவின் கால்படாப் பூமியாகத் தப்பிப் பிழைத்திருக்கின்றது. ஆனால் அரசின் திட்டப்படி பாடசாலைகள் மீளத் திறக்கப்படுமானால் கிளிநொச்சியும் விரைவில் கொரோனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். கொரோனாவைப் பரப்பி, நாட்டையே அலற வைக்க, ஒரேயொரு கொரோனாத் தொற்றாளியின் அலட்சியமே போதுமானது. ஒருகுடம் பாலை விஷமாக்க, ஒரு துளி விஷம் போதும். ஒரு நாட்டையே கொரோனா தேசமாக மாற்ற ஒரு தொற்றாளியே போதும். இனியாவது அரசு தன் பிடிவாதத்தை விடுத்து, அரசியல் லாபங்களை ஒதுக்கிவிட்டு மக்கள் நலனுக்காக சில துணிச்சலான முடிவுகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் நாடு கொரோனாவில் இருந்து தப்பிப்பிழைக்கும்.

# அதிகமாக பொருள்களை கொள்வனவு செய்யாதீர்

## மக்களுக்கு ஆலோசனை

கொழும்பு,ஒக்.31



கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு, நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேவைக்கு அதிகமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதை முதலில் தவிர்க்க வேண்டும் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், அரச சேவையைச் சீராக முன்னெடுக்கவும். அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.

அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒரு சில பிரதேசங்களில் மக்கள் பொறுப்பற்ற விதமாகச் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஊரடங்குச் சட்டம் முழு நாட்டுக்கும் மாதக்கணக் கில் அமுல்படுத்தப்படும் என்று தவறான வதந்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பொது மக்கள் தேவைக்கு அதிகமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வசதி படைத்தோர் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது, சாதாரண மக்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களைத் தேவைக்கு மேலதிகமாக கொள்வனவுசெய்ய வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. அத்தியாவசியப் பொருள்கள் தேவையான அளவு களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளன - என்றார். (க-இ)

## பரிசோதனை நடத்தும் போர்வையில் கொள்ளை

கொழும்பு,ஒக்.31

கொரோனாத் தொற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதாக வீட்டுக்குள் நுழைந்தவர்கள், அங்கிருந்தவர்களுக்குத் தூக்க மாத்திரைகளைக் கொடுத்து, கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கொழும்பு மஹாவ பகுதியில் நடந்துள்ளது.

பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அணியும் சீருடையுடன், வீடொன்றுக்குள் புகுந்த மூவர் இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டிலிருந்தவர்களுக்குத் தூக்க மாத்திரைகளைக் குடிக்கக் கொடுத்துள்ளனர். அதன்பின்னர் வீட்டிலிருந்த பணம், நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)


## எரிபொருள் நிலையங்களைத் திறக்க அனுமதி

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும், மூன்று மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட 157 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் திறந்திருக்கும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 62 நிலையங்களும், கம்பஹா மாவட்டத்தில் 68 நிலையங்களும், களுத்துறை மாவட்டத்தில் 27 நிலையங்களும் திறந்திருக்கும் என்று கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (க-இ)

## உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்குச் சலுகை

கொழும்பு,ஒக்.31




கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக, போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கணித பாடத்துக்கு சாதாரண கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாணவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின், பரீட்சை மத்திய நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு அறிவிக்க முடியும்.

இல்லையேல், 1911 என்ற துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாக, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அழைக்க முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க-இ)

## பி.எச்.ஐ. இருவருக்கும் கொரோனா

கொழும்பு,ஒக்.31

கொழும்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இருவரும் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்திய பின்னர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதனால் ஜிந்துபிட்டியவிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவைத் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 14 மாதக் குழந்தைக்கு எமனானது போத்தல் மூடி

கொழும்பு,ஒக்.31

சிறிய போத்தல் மூடி தொண்டையில் சிக்கியதால், 14 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் திவுலுப்பிட்டிய நூனகஹ மேற்கு பிரதேசத்தில் நடந்துள்ளது. ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தை, அங்கு உயிரிழந்துள்ளது.

மரண விசாரணையின்போது, குழந்தையின் தொண்டையில் சிறிய போத்தல்மூடி சிக்கியிருப்பது தெரிய வந்துள்ளது.

போத்தல் மூடி தொண்டையில் சிக்கியதால், மூளைக்கான இரத்த ஓட்டம் தடைப்பட்டு குழந்தை உயிரிழந்தது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திவுலுப்பிட்டிய பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# நாட்டில் கொரோனா அச்சம் நீங்கவில்லை

## மன்னார் சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை



மன்னார், ஒக். 31

கொரோனாத் தொற்று குறையாததால், மன்னார் மக்கள் மிக அவதானமாகவும் இறுக்கமாகவும் சுகாதார நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ரி.வினோதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாட்டில் பல பாகங்களிலும் கொரோ னாத் தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்படுகின்றமை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

எனவே மன்னார் மாவட்ட மக்கள் மிகவும் அவதானத்துடன் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன் அநாவசியமற்ற போக்குவரத்துக்களையும், மக்கள் ஒன்று கூடுவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். தற்போது வரை மன்னாரில், 1,053 பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு, அதில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் 10 பேர் இரணவில மருத்துவமனைக்கும், ஒருவர் கந்தகாடு மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாவை ஒழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். எனவே மன்னார் மாவட்ட மக்கள் வழமையான சுகாதார நடைமுறையை இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள். பொதுப் போக்குவரத்துக்களை முடிந்த வரை தவிர்ப்பதுடன் தேவையில்லாமல் ஒன்று கூடுவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள் - என்றார். (ஐ-213)

# கப்பல்கள் இரண்டு கடலில் மூழ்கடிப்பு

கொழும்பு, ஒக்.31

சேவைக்குப் பயன்படாத இரண்டு கப்பல்களை இலங்கை கடற்படையினர் அகற்றியுள்ளனர் என கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

'வீரயா' மற்றும் 'ஜெகத்' ஆகியகப்பல்களேசேவையில் இருந்து அகற்றப்பட்ட நிலையில் திருகோணமலை கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு கப்பல்களும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை கடற்படையின் சேவைக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

குறித்த கப்பல்கள் இரண்டும் கடலில் மூழ்கடிக்கப்பட முன்னர் அவற்றின் இயந்திரங்கள் யாவும் அகற்றப்பட்டு சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-இ)



# இந்து சமய விவகாரங்களுக்கு இரு ஆலோசகர்கள் நியமனம்

கொழும்பு, ஒக்.31

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இந்து சமய விவகாரங்களுக்கு இரண்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, இந்து சமய விவகாரங்களுக்கான பிரதம இந்து சமய விவகார ஆலோசகராக ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்து மத விவகாரங்களுக்கான ஆலோசகராக கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் பிரதமரிடம் தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். (ஐ-இ)

# ரயில் போக்குவரத்தில் சில திருத்தங்கள்

கொழும்பு, ஒக்.31

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதால், ரயில் போக்குவரத்துக்கான கால அட்டவணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி ரம்புக்கனை தொடக்கம் கொழும்பு கோட்டை வரையும், பெலியத்தை, காலி, அளுத்கம மற்றும் களுத்துறை தொடக்கம் மருதானை வரையும், அவிசாவளையில் இருந்து கொழும்பு கோட்டை வரையும், சிலாபம் தொடக்கம் கொழும்பு கோட்டை வரையும் நாளை முதலாம் திகதி வரை எவ்வித ரயில்களும் சேவையில் ஈடுபடமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான ரயில்கள் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-இ)

# வளி மாசுபடுதல் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.31

நாட்டில் வளி மாசு மட்டத்தின் அளவு அதிகரித்துள்ளது என தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனம் தெரி வித்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் கடந்த 27ஆம் திகதி முதல் வளி மாசு அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்திய துணைக் கண்டத்தின் மேல் வானத்தின் வளி மாசு இலங்கையின் வளிமண்டலத்திற்குள் நுழைவதனாலேயே இவ்வாறு வளி மாசு அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-இ)

# மேல் மாகாணத்தில் 98 பேர் கைது

கொழும்பு, ஒக்.31

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை 5 மணிவரையான காலப்பகுதியில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களில் 42 பேர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா வைத்திருந்த 6 பேர், சட்டவிரோத மதுபானங்களுடன் 37 பேர், கோடா வைத்திருந்த 6 பேர் மற்றும் ஏனைய குற்றச்சாட்டுகளில் 7 பேர் என மொத்தம் 98 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-இ)

# விசாரணை முடிவுகள் சுகாதார அமைச்சுக்கு

கொழும்பு, ஒக்.31

கொரோனா அலையின் பரவல் தொடர்பான விஞ்ஞான ரீதியான விசாரணை முடிவுகளை சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக டெங்கு ஆராய்ச்சி மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நிலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மினுவங்கொட பிரெண்டிக்ஸ் கொத்தணியுடன் சேர்ந்தாகப் பரவிய மற்றுமொரு கொரோனா அலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான விசாரணை முடிவுகளே இந்த வாரம் சுகாதார அமைச்சிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன- என்றார். (ஐ-இ)

# கடின உழைப்பால் நற்சமூகம் வளரும்

*அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக்.31

சுயமுயற்சியாளர்களின் கடின உழைப்பால் நற் சமூகம் மலரும் என்று கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை,எழுவைதீவு சுயதொழில் முயற்சியாளர்கள் 15 சிறு குழுக்களாக உருவாக்கப்பட்டு ஒன்றிணைந்த சமூக சுயதொழில் முயற்சி அமைப்புக்கள் மூலமான தலைவர் தெரிவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடின உழைப்புக்கு ஏற்ற முன்னேற்றம் அடையக்கூடிய வாழ்வாதாரம் மேம்படுவது சமூக மாற்றத்தின் வெளிப்பாடாக குடும்பங்களிலும் சமூகத்திலும் நல்லுறவுடன் நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே மிக முக்கியமாகும்.

சோர்ந்திருப்போருக்கு உதவிகள் வழங்குவதை விட சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவோரை ஊக்கமூட்டுவதே இவ் வாழ்வாதார உதவித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் - என்றார். (ஐ)

# இங்கிலாந்து திரும்பும் 65 கொள்கலன் கழிவு!

கொழும்பு, ஒக்.31

ஐக்கிய இராஜ்ஜியத்துக்கு மேலும் ஒரு தொகுதி கழிவுகளை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு துறைமுகத்தில் உள்ள 20 கொள்கலன் கழிவுகள் நேற்று அனுப்பப்பட்டன.

அத்துடன், மேலும் 65 கொள்கலன் கழிவுகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராஜ்ஜியத்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட கழிவுகள் அடங்கிய 242 கொள்கலன்களை மீள அனுப்புமாறு இந்த மாதத்தின் ஆரம்ப பகுதியில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

2017 ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் இங்கிலாந்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 263 கொள்கலன்களில் ஒரு தொகுதியே இவ்வாறு மீள அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# காவலூரிலும் பொங்கியது கடல்

யாழ்ப்பாணம், ஒக்.31

**ஊர்காவற்றுறையின் பல பகுதிகளில் கடல் பெருக்கெடுத்து, அருகில் உள்ள குடிமனைகளுக்குள் கடல்நீர் புகுந்துள்ளது. ஏற்கனவே பூநகரி மற்றும் நாவாந்துறைக் கடல் பெருக்கெடுத்து கிராமத்துக்குள் புகுந்தது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் இரவு ஊர்காவற்றுறையிலும் கடல் பெருக்கெடுத்துள்ளது.**



இவ்வாறு பெருக்கெடுத்த கடல், 50 முதல் 70 மீற்றர் வரையான தூரத்துக்கு அருகில் உள்ள குடிமனைகளுக்குள் புகுந்தது. இதனால், கிணறுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறையில் வடக்கு நாரந்தனை, தம்பாட்டி, தாழையடி போன்ற பகுதிகளில் கடல் பெருகியுள்ளது.

இவ்வாறானதொரு சம்பவம் கடந்த காலங்களில் இடம்பெற்றதில்லை. அதிக மழை என்றால், வெள்ளப்பெருக்கு ஏற்படும். ஆனால் தற்பொழுது மழையில்லாமலேயே கடல் பெருகி கிராமத்துக்குள் வந்துள்ளது. இதனால் எமது கிணறுகள், விவசாய, தோட்ட நிலங்கள் உவராக மாறும் அபாயம் உள்ளது" என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் இடர் முகாமைத்துவப் பிரிவினர் நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர். (ப)

## மழை வேண்டி இளநீர் அபிசேகம்

கிளிநொச்சி, ஒக்.31

மழை வேண்டி 108 இளநீர் அபிசேகம் கல்மடுக்குளம் விநாயகர் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுப் பகுதியில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் மழை இன்மையால் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-113)

## 24 மணி நேரத்தில் 4 பேர் கைது

பளை, ஒக்.31

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 டிப்பர்கள் பறிக்கப்பட்டுள்ளன, அதன் சாரதிகள் நால்வர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணவர்தன தெரிவித்தார். (ப-316)

## சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஒக்.31

சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டியன் குளம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-19)

## நாட்டின் நலன் கருதியே இ.தொ.கா. முடிவெடுக்கும்

### அதன் பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நுவரெலியா, ஒக்.31

நாடு மற்றும் மலையக மக்களின் நலனை முன்னிலைப்படுத்தியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவுகளை எடுக்கும். தனி நபர்களுக்காக ஒருபோதும் தீர்மானங்களை எடுத்ததில்லை. இனி எடுக்கப்போவதும் இல்லை என்று அதன் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

துமிந்தவுக்கு பொதுமன்னிப்பு வழங்கக்கோரும் மனுவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கையொப்பமிடவில்லை. ஏனெனில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதலே தனி நபர்கள் தொடர்பில் காங்கிரஸ் முடிவுகளை எடுப்பதில்லை. நாடு மற்றும் சமூகத்தின் நலன்களை முன்னிலைப்படுத்தியே முடிவுகளை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட நபருக்கு மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. சட்டம் உள்ளது. எனவே, சட்டத்திற்குப் புறம்பாக என்னால் எதையும் செய்ய முடியாது என்றார். அத்துடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜீவன் தொண்டமான்,

கொரோனா வைரஸ் தாக்கத்தில் சந்திப்புக்களை நடத்த முடியவில்லை. இருந்தாலும் தனிப்பட்ட ரீதியில் பேச்சு நடத்தி வருகின்றோம். நேற்றுக்கூட தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் கதைத்தேன். விரைவில் தீர்வு கிட்டும் - என்றார். (ப)

## கல்விளான் குளத்தை அண்டி கிரவல் அகழ மக்கள் எதிர்ப்பு

### நிலைமைகளை ஆராய்ந்தார் செல்வம் எம்.பி.

முல்லைத்தீவு, ஒக்.31

கல்விளான் குளத்தை அண்டிய பகுதியில் கிரவல் அகழ எடுக்கும் நடவடிக்கைக்கு பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து கிரவல் அகழப்பட்டு மேலும் ஆழமாக்கப்பட்டால் அயலிலுள்ள விவசாய நிலங்கள், குடியிருப்புக்கள், வீதிகள் என்பன வெகுவாகப் பாதிக்கும் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, கல்விளான் குளத்தை அண்டிய பகுதிகளை மேலும் ஆழப்படுத்தி, கிரவல் அகழ்வதற்காக அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் மற்றும் சில அமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனர்,

இந்த நடவடிக்கைக்கு பிரதேச விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் பிரதேச விவசாயிகள் மற்றும் பொது மக்கள் முறையிட்டனர்.


நேற்று முன்தினம் குறித்த இடத்துக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

"குளத்தை அண்டிய பகுதிகளை ஆழப்படுத்தி கிரவல் அகழ்வதால் ஏற்படவிருக்கும் பிரச்சினைகளை எழுத்து மூலமான ஆவணங்களாகத் தருமாறு பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் கூறியுள்ளேன். இதுதொடர்பாக மாவட்டச் செயலரிடம் தெரிவித்து இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன் என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (ப-246)



## சமமான அபிவிருத்தியே மேற்கொள்ளப்பட்டதாம்

### ஜனாதிபதி கூறுகிறார்



கொழும்பு, ஒக்.31

நகரங்களுக்கிடையே சமமான அபிவிருத்தியை ஏற்படுத்தும் சுபீட்சமான நோக்கை நாம் ஆரம்பித்தோம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்து.

அதில் மேலும் உள்ளதாவது;

'மிகச் சிறந்த நகரம் மற்றும் மிகச் சிறந்த வாழ்க்கை' என்பதே உலக நகரங்கள் தினத்தின் பொதுவான கருப்பொருளாகும். நிலையான நகர்ப்புற அபிவிருத்தியின் ஊடாக நகரில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்ல முடியும். கிராமம் மற்றும் நகரம் இடையே சமநிலையைப் பேணி அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும்போது, நகர அபிவிருத்தி என்பது ஒரு மையப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கோட்பாடாகும்.

நகர்ப்புறத்தை அழகுபடுத்தல், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக நாம் ஆட்சிக்கு வந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நகர்ப்புற அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கினோம். நாட்டின் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மாத்திரம் முக்கியத்துவமளிப்பதிலிருந்து அப்பால் சென்று நாடளாவிய ரீதியில் நகரங்களுக்கிடையே சமமான அபிவிருத்தியை ஏற்படுத்தும் சுபீட்சமான நோக்கை நாம் ஆரம்பித்தோம் - என்றுள்ளது. (ப)

# பி.சி.ஆர். இயந்திரங்கள் திருத்தப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.31

**பி.சி.ஆர்.இயந்திரங்களை உடனடியாகத் திருத்துதல் மற்றும் புதிய பி.சி.ஆர்.இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரும் செயற்பாட்டை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுக் கொண்டார்.**



நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாட்டுக்குள் பரவியுள்ள கொரோனா. அலையைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு பின்னடைவை அடைந்துள்ளது. நாட்டிலுள்ள பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுந்தடைந்துள்ளமையே இதற்கான காரணமாகக் கருதப்படுகிறது. இந்த பி.சி.ஆர். இயந்திரங்கள் தரமானவையா எனும் சந்தேகம் எழுந்துள்ளது.

இவை பழுதானால் அதனைத் திருத்தும் தொழில்நுட்பமும் ஆள்களும் இலங்கையில் இல்லாதமை பெரும் இழப்பாகக் காணப்படுகிறது. இதனால், நாட்டு மக்கள் பெரும் சவாலுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். சுகாதார சேவையில் ஆள்பலமும் குறைந்துள்ளது. எனவே பி.சி.ஆர்.இயந்திரங்களை துரிதமாகத் திருத்துவதும், புதிய பி.சி.ஆர்.இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவருவதும் அத்தியாவசியமாகக் காணப்படுகிறது. இதனை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-இ)



## மரக்கன்று நடுகை

யாழ்ப்பாணம்,ஒக்.31

"வாழ்வு வளம்பெற மரம் நட கரம் சேர்ப்போம்" என்னும் கருப்பொருளில் இமை குழுமம் அமைப்பினரால் மரக்கன்று நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மல்லாகத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கே.கே.எஸ் வீதியில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சுகிர்தன் கலந்துகொண்டார். (ஐ-63)

## படையினர் கட்டுப்பாட்டில் இராஜகிராமம்

முடக்கப்பட்டுள்ள நெல்லியடி இராஜகிராமத்துக்கு இராணுவம் மற்றும் பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள் ளது.

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புபட்டதால், வடமராட்சி - நெல்லியடி இராஜகிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது. அந்த நபர் பல இடங்களுக்குச் சென்று வந்ததால், அந்தக் கிராமமே முடக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் கிராமத்துக்குள் யாரும் உள்செல்லவோ, அல்லது கிராமத்திலிருந்து வெளியில் வரவோ முடியாதவாறு அங்கு நேற்று முதல் இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்த மக்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடவடிக்கையில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். (ப-160)

## அமெரிக்காவின் மிரட்டலுக்கு லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக்.31

அமெரிக்காவின் இலங்கை மீதான மிரட்டலை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளார் தோழர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

அமெரிக்கா தனது உலக மேலாதிக்கத்துக்கான மூலோபாயப் பங்காளிகளாக இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற பிராந்திய வல்லாதிக்க நாடுகளுடன் ஏனைய சில கூட்டாளி நாடுகளையும் இணைத்து இந்தோனேசிய - பசுபிக் பிராந்தியத்தில் தன்னை நிலை நிறுத்த முனைகின்றது. அதற்கான கூட்டில் இலங்கையையும் இணைத்துக்கொள்வதைத் திட்டமாகக் கொண்டே மைக் பொம்பியோவின் வருகை இடம்பெற்றமையை ஊகிக்கக்கூடியதாக உள்ளது. தற்போது இடம்பெற்று வருகின்ற இலங்கை மீதான பிராந்திய வல்லாதிக்க நாடுகளின் நகர்வுகள் தொடர்பாக இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரும் மிகவும் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் அவதானிக்க வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ஐ-இ)

## குருதிக்கொடை



யாழ்பபாணம், ஒக். 31

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் 6 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் குருதித்தான முகாம்களின் வரிசையில் நேற்றும் குருதிக் கொடை வழங்கினர்.

கொரோனா தொற்றுநிலை காரணமாக குருதி வங்கிகளில் நிலவும் குருதி வகைகளின் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்கொடை நேற்று நடைபெற்றது. இதில் சங்க உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (து)

## சலூன் உரிமையாளருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஒக்.31

சிகை அலங்கார நிலையம் ஒன்றின் உரிமையாளருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கஹாத்துடுவ பிரதேச சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த சிகை அலங்கார நிலையம் மூடப்பட்டுள்ளதுடன் சிகை அலங்காரம் செய்து கொண்ட 125 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பேலியகொட மீன் சந்தையில் மீன் கொள்வனவு செய்த கஹாத்துடுவ மீன் வியாபாரி ஒருவர் இந்த சிகை அலங்கார நிலையத்துக்கு வந்து சென்றுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

அவர்மூலம் சிகை அலங்கார நிலையத்தின் உரிமையாளருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருக்கலாம் என்று சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

28 வயதான இந்த நபர் ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் அவரது வீடு மற்றும் 4 இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

## உடையார்கட்டை சேர்ந்தவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

முல்லைத்தீவு, ஒக். 31

முல்லைத்தீவு உடையார்கட்டைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. 48 வயதுடைய குறித்த நபர் கடந்த இரு வருடங்களாகக் கொழும்பில் வசித்து வந்துள்ளார். இந்த நிலையிலேயே அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அவருடன் அவரின் குடும்பத்தினர் அனைவரும் கொழும்பிலேயே வசிக்கின்றனர். ஆனால் அவர்களின் குடும்பப் பதிவு உடையார்கட்டு என்று காணப்படுவதன் காரணத்தாலேயே உடையார்கட்டைச் சேர்ந்தவருக்குக் கொரோனா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் உடையார்கட்டு மக்கள் வீண் பதற்றம் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-19)

## ஆணைக்குழுவுக்கும் பாய்ந்தது கொரோனா

கொழும்பு, ஒக்.31

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவுடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

பி.சி.ஆர். சோதனையைத் தொடர்ந்து குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பாதிக்கப்பட்டுள்ளார் என்று உறுதியாகியுள்ளது.

ஆணைக்குழுவைச் சேர்ந்த மற்றுமொரு உத்தியோகத்தர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவரின் பி.சி.ஆர். சோதனை முடிவுகளுக்காக காத்திருக்கின்றோம் என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## குருநாகலும் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஒக்.31

குருநாகல் நகரசபை, தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.


குருநாகல் நகரசபை ஊழியர்கள், 8 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து குருநாகல் நகரசபை, தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.(க-இ)

# ஆய்வுகூட வசதிகள் இல்லை; பி.சி.ஆர். சோதனைகள் தேக்கம்

## ஆங்கில ஊடகம் தகவல்

**கொழும்பு, ஒக்.31**
**போதியளவு ஆய்வுகூட வசதிகள் இல்லாமையால் சேகரிக்கப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகளை சோதனைக்குட்படுத்தி வெளியிட முடியாத நிலை உருவாகியுள்ளது என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



கொரோனாத் தொற்றாளர் என சந்தேகிக்கப்பட்ட பத்தாயிரம் பேரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளே இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்படாமல் உள்ளன. நான்கு மருத்துவமனைகள் இந்த நிலையை எதிர்கொண்டுள்ளமையால் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கராப்பிட்டிய மருத்துவமனையில் 2 ஆயிரத்து 145 மாதிரிகளும் அனுராதபுரம் மருத்துவமனையில் ஆயிரத்து 500 மாதிரிகளும், தேசிய தொற்றுநோய் மருத்துவமனையில் ஆயிரத்து 800 மாதிரிகளும், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தில் 4 ஆயிரத்து 500 மாதிரிகளும் இவ்வாறு குவிந்து கிடக்கின்றன என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# தவறணைக்குச் சென்றோர் தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு, ஒக்.31
சுகாதார நடைமுறைகளைப் மீறிச் செயற்பட்ட 17 நபர்கள் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் தனிமைப்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு கோட்டைமுனை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கள்ளுத் தவறணை உரிமையாளர் மற்றும் அதன் வாடிக்கையாளர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனையில் இவர்கள் பிடிபட்டுள்ளனர். மட்டக்களப்பின் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 32ஆக அதிகரித்துள்ளது.

இதையடுத்து சுகாதார நடைமுறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-46)

# உதவிகள் ஏதுமின்றி தொழிற்சாலை ஊழியர்கள்

## டபிந்து கலக்டிவ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.31
தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை என டபிந்து கலக்டிவ் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் மத்தியில் பணியாற்றும் டபிந்து கலக்டிவ் அமைப்பின் இணைப்பாளர் சமிலா துசாரி தெரிவித்துள்ளதாவது:

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். தனிமைப்படுத்தலில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களிடம் உணவைக் கொள்வனவுசெய்ய பணம்கூட இல்லாத நிலை காணப்படுகின்றது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு உதவ விரும்புபவர்கள்கூட அவர்களைத் தொடர்புகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. சிலருக்கு அவர்களது தொழிற்சாலைகள் உணவை வழங்கியுள்ளன ஆனால் அவை போதுமானவையல்ல ஏனையவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. மேல்மாகாணம் முழுவதும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் நிலைமை இன்னமும் மோசமடையும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# மீன் விற்பவருக்கு கொரோனா; வாங்கியோருக்கு வலைவீச்சு

பதுளை, ஒக்.31
வெலிமடை சாப்புக்கடை எனும் இடத்தில் மீன் விற்பனையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து 27, 28, 29 ஆம் திகதிகளில் அந்த மீன் விற்பனை நிலையத்தில் மீன் கொள்வனவுகளை மேற்கொண்டவர்கள் உடனடியாக பதுளை பொது சுகாதாரப் பிரிவினர் மற்றும் வெலிமடை பொலிஸ் நிலையத்தினர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தவறின் அப் பகுதி சுகாதார சேவை பணியகத்தின் 0572245178 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீன் விற்பனையாளருக்கு கொரோனா அறிகுறிகள் தென்பட்டதையடுத்தே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (வ-இ)

## அலுவலருக்குத் தொற்று

# இழுத்து மூடப்பட்டது சமுர்த்தி திணைக்களம்

கொழும்பு, ஒக்.31
கொழும்பிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணியாற்றும் பெண் முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து உடனடியாகவே அத் திணைக்களம் இழுத்து மூடப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான பெண்ணின் கணவர் மீனவர் எனவும் இதனை அவர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண்ணை வாரத்தில் மூன்று நாள்கள் மட்டுமே பணிக்கு வருமாறு தெரிவித்த போதிலும் அவர் வாரத்தில் ஐந்து நாள்களும் பணிக்கு வந்துள்ளார் என திணைக்கள அதிகாரி ஒருவர் சிங்கள இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளார். மேலும், ஊழியர்கள் அனைவரையும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# பண்டாரவளையில் கொரோனா சிகிச்சை நிலையம்

பண்டாரவளை, ஒக்.31
பண்டாரவளையில் கொரோனா சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அரச வைத்திய சங்கத்தின் பதுளைக் கிளைத் தலைவர் பாலித்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பண்டாரவளை அரசினர் மருத்துவமனை வளாகத்தில், மேற்படி கொரோனா நிலையப் பிரிவு இடம்பெறும். இப் பிரிவில் நூறு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் வகையில் நூறு கட்டில்கள் போடப்பட்டுள்ளன. நூறு நோயாளர்கள் ஒரு தடவையில் சிகிச்சை பெறும் வகையில் அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (வ-இ)



# நுவரெலியாவில் இதுவரை 25 கொரோனாத் தொற்றாளர்

நுவரெலியா, ஒக்.31
நுவரெலியாவில் இதுவரை 25 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என மாவட்ட சுகாதார பணிப்பாளர் மருத்துவர் இமேஷ் பிரதாபசிங்க தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய 25 கொரோனாத் தொற்றாளர்கள் நுவரெலியா மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் பிரண்டிக்ஸ் கொத்தணியுடன் தொடர்புடைய 8 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் தொடர்பில் இருந்த 1041 பேர் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 520 பேர் இருவார தனிமைப்படுத்தலை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்குள் ரிகில்லகஸ்கட மருத்துவமனையினரும் அடங்குகின்றனர் எனத் தெரிவித்தார். (வ-இ)


## இலங்கையின் மூன்றாவது தொற்று அலை:

# கொரோனா தொடர்பில் ஆராய்ச்சிகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.31

**தற்போது நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொடர்பான ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், மினுவாங்கொட கொரோனாப் பரவலுடன் ஏற்பட்ட கொரோனாத் தொற்றானது இதற்கு முன்னர் இலங்கையில் பரவியதா அல்லது வேறு வைரஸா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு விஞ்ஞான ரீதியான பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

தற்போது நாடு முழுவதும் பரவிவரும் வைரஸ் தொற்றானது, மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இது தொடர்பான பரிசோதனை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பரிசோதனை முடிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அதற்கமைய கந்தகாடு, மினுவாங் கொட பரவல் மற்றும் பேலியகொடவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பில் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



சீதுவையில் 5 நட்சத்திர ஹொட்டலில் கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்ட துருக்கியில் இருந்து வந்த உக்ரேன் விமான சேவை ஊழியர்களுக்கு உதவி செய்த ஹொட்டல் ஊழியர்கள் மூலம் இவ் வைரஸ் மீண்டும் பரவியிருக்க வாய்ப்புக்கள் உள்ளன என புலனாய்வுப் பிரிவு சுட்டிக் காட்டியது. இது நூற்றுக்கு 80 வீதம் சரியானதெனவும், மேலும் சில முறைகள் ஊடாக அதனை உறுதிசெய்வதற்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ந-இ)

## மின்மானி வாசிப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### நாட்டு மக்களிடம் மின்சார சபை வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.31

தற்போதைய சூழ்நிலையில் மின்மானி வாசிப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மின்சார சபை கேட்டுக் கொண்டுள்ளது.

வீடுகளில் உள்ள மின்சார அளவீட்டுப் பெட்டியின் மானி தெளிவாகத் தெரியும்படி வைத்திருக்குமாறும், பட்டியலை வழங்கவரும் மின்மானி வாசிப்பாளர்களிடத்தின் அருகில் செல்லாது மின்சாரப் பட்டியலைப் பெற்றுக்கொள்ளுமாறும் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பில் பொதுமக்கள் அதிக கவனம் செலுத்துமாறு மின்சார சபையின் நுகர்வோர் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் சங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந-இ)

## மட்டக்களப்பில் மேலும் இருவருக்குத் தொற்று

மட்டக்களப்பு, ஒக்.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன்மாரி பகுதியில் ஒருவரும் ஓட்டமாவடியில் ஒருவரும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர். ஓட்டமாவடியில் இனங்காணப்பட்டவர் பேலியகொட மீன்சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர் எனவும் மாவடிமுன்மாரியைச் சேர்ந்தவர் கொழும்பில் இருந்து வந்தவர் எனவும் கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த நபர் கடந்த 27ஆம் திகதி கொழும்பில் இருந்து தனியார் பேருந்து ஒன்றில் மட்டக்களப்புக்கு வந்துள்ளார். அவர் சுகவீனம் காரணமாக மகிழடித்தீவு வைத்திய சாலைக்கு சிகிச்சைக்குச் சென்ற நிலையில் அங்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ந-இ)



இலங்கை விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சுதர்ஷன பதிரண நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை விமானப் படையின் 18ஆவது தளபதியாக நியமிக்கப் பட்டுள்ள இவருக்கு, நவம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ந)

## மருந்தக அனுமதிப்பத்திரத்துக்கு ஊரடங்கு "பாஸ்"

கொழும்பு, ஒக்.31

ஊரடங்கு காலப்பகுதியில் மருந்துகளை விநியோகிக்கும்போது, மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்த முடியும் என தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில், தடையின்றி பொதுமக்களுக்கு மருந்துகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு வீடுகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும்போது, தனிமைப்படுத்தல் சுகாதார விதிமுறைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கு அமைய மருந்தக உரிமையாளர்கள் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-இ)





## சிறைச்சாலைகளில் சிறப்புத் திட்டம்

கொழும்பு, ஒக்.31

சிறைச்சாலைகளுக்குள் கொவிட்19 தொற்று பரவுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அவசர திட்டம் அமுலாக்கப்படுகிறது.

இதனடிப்படையில் சிறைச்சாலைகளுக்குள் கொவிட்19 தொற்றாளர்கள் இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள் ளது.

இந்த திட்டத்திற்கேற்ப துரித நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். கொவிட்-19 தொற்றுப் பரவலை சமாளிப்பதற்கான வழிகாட்டல்கள் பற்றி சிறைச்சாலை பணியாளர்கள், சுகாதார சேவை வழங்கறிஞர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

கைதிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தல், கைதிகளை வெளிவேலைகளில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அவசரநிலை ஏற்படுமானால் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையை சிகிச்சை நிலையமாக பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்படுகிறது. (ந-இ)

## நடமாடும் பி.சி.ஆர் சோதனை வாகனம் தனியார் வைத்தியசாலையால் அறிமுகம்

கொழும்பு, ஒக்.31

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்று வாகனத்தில் இருந்தவாறே பி.சி.ஆர் பரிசோதனையை செய்துகொள்ளக்கூடிய புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ் வசதி மூலம் தாமாக பி.சி.ஆர். சோதனை செய்துகொள்ள விரும் புவர்கள் வைத்தியசாலை மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை நிலையங்களுக்குச் செல்லாமல் வாகனத்திலிருந்தவாறே பி.சி.ஆர் சோதனையைச் செய்து கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் ஒரு பி.சி.ஆர் பரிசோதனைக்கு 6000 ரூபா நிர்ணயிக்கப்பட்டபோதும் பல தனியார் வைத்தியசாலைகள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக கட்டணம் அறவிட்டு வருகின்றன என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# மின் பிரச்சினைக்கு 1987 ஐ அழைக்கவும்


கொழும்பு, ஒக்.31
ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலும் மின்சாரம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டால், அதற்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு பராமரிப்புப் பிரிவு தயாராக உள்ளது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. இந்தப் பராமரிப்புப் பிரிவு 24 மணித்தியாலயமும் செயற்படும்.
மின்சாரத் துண்டிப்பு, மின்சாரப் பிரச்சினைகள் தொடர்பில் 1987 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



# கொரோனா நெருக்கடி; ஊழியர்களுக்குப் பயிற்சி

வடமராட்சி,ஒக்.31
கொரோனா நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் ஊழியர்களுக்கு, கொரோனா தொடர்பான பயிற்சி நடத்தப்பட்டது. மருத்துவ அத்தியட்சகர் மருத்துவ கலாநிதி வே.கமலநாதன் தலைமையில், தொற்றுநோய் தடுப்புப் பிரிவினால் பயிற்சி இப் நடத்தப்பட்டது.
கொரோனா நோயாளர்கள் அல்லது சந்தேகிக்கப்படும் தொற்றுள்ள நோயாளர்களைக் கையாளும்போது எவ்வாறான தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் அணிய வேண்டும், எவ்வாறு பாதுகாப்பாகக் கழற்ற வேண்டும், பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளை எவ்வாறு நோயாளியிடமிருந்து பெற்றுக்கொள்வது என்பன தொடர்பாக செய்முறை ரீதியான பயிற்சி வழங்கப்பட்டன. பயிற்சியில் தாதியர்கள், சிற்றூழியர்கள் கலந்து கொண்டனர். (க-222)

# கைத்துப்பாக்கியுடன் சன்னங்களும் மீட்பு



திருமலை,ஒக்.31
சிறிய கைத்துப்பாக்கி ஒன்றுடன், ஐந்து சன்னங்களும் மீட்கப்பட்டுள்ளன.
திருகோணமலை ஈச்சிலம்பற்றுப் பகுதியில் இவை மீட்கப்பட்டன என்று கந்தளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச். டபிள்யு. விஜயசிறி தெரிவித்தார்.
துப்பாக்கி சீனா நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கஇ)



# பொதுநோக்கு மண்டப சீரமைப்பில் முறைகேடு

## மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக்.31
வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்மடு பொதுநோக்கு மண்டபச் சீரமைப்பில் முறைகேடு உள்ளது என்று தெரிவித்து அக்கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கல்மடு பாடசாலைக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
பொது நோக்கு மண்டபக் கூரைக்குப் போடப்பட்ட, மரங்கள் தரமற்றவை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
போராட்ட இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான கு.திலீபன் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். பொதுநோக்கு மண்டபத்தைப் பார்வையிட்ட அவர், குறித்த வேலை தொடர்பில் கட்டடங்கள் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரின் மதிப்பீட்டுக்கு பணித்தார். அதுவரை நடைபெறும் வேலைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் தெரிவித்திருந்தார். (ஜ-18)




# வெறி முதல் வெற்றி வரை...



சுகி.சிவம்

"டேய்... வேலை விஷயமா எம்.பி.யைப் பார்த்துட்டு வான்னு சொல்றேன். போகலயா?" அப்பா அலறுகிறார்.
"போப்பா... அந்த ஆள் நூறு தடவை அலைய விடறான். செய்யறதா இருந்தா முதல் தடவையிலயே செய்யமாட்டானா?" பொருமுகிறான் மகன்.
ஒரு விஷயத்துக்காக ஒருவரிடம் மூன்று, நான்கு முறை போக நேர்ந்தால் இன்றைய இளைஞர்களுக்குக் கடுப்பாக இருக்கிறது. உண்மைதானே!
எந்த விஷயமும் எடுத்த எடுப்பிலேயே, முதல் முயற்சியிலேயே வெற்றியாகி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மிகவும் குழந்தைத்தனமானது.
"நான் முயற்சி செய்தேன். வெற்றி கிடைக்கவில்லை" என்று சொல்லாதீர்கள். வெற்றி பெறும்வரை முயற்சி செய்தீர்களா? வெற்றி பெறும் வரை ஏன் நீங்கள் முயற்சி செய்யவில்லை? என் கேள்விக்குப் பதில் சொல்லிப் பாருங்கள்.
முயற்சி போதாது. விடாமுயற்சி வேண்டும். மந்திரத்தால் மாங்காய் காய்க்காது. மாறி மாறி முயன்றால்தான் நடக்காததும் நடக்கும்... கிடைக்காததும் கிடைக்கும் எனவே முதல் முயற்சியில் வெற்றியில்லை என்று வெளியேறி விடாதீர்கள். வெற்றி கிடைக்கும்வரை முயன்று கொண்டே இருங்கள்.
ஒரு புரட்சிச் சாமியார் ஒருவர் இருந்திருக்கிறார். அவர் பெயர் இராமானுஜர். அவருக்குத் திருக்கோட்டியூர் நம்பி என்பவர் ஒரு குரு. அவரிடம் 'நமோ நாராயணா' என்கிற மந்திர அர்த்தத்தைப் பெற முதல் முறை போனார். "பிறகு பார்க்கலாம்" என்றார். ஒரு முறை... இரு முறையல்ல... பதினெட்டு முறை நடந்தார். உங்களுக்கு இப்படி ஒரு நிலை வந்தால் பதினெட்டு முறை



படையெடுப்பீர்களா? "ஆமாம்... இவன் பெரிய இதுவாக்கும்" என்று அவரை அலட்சியப்படுத்துவீர்கள். "இந்த விஷயம் இல்லைன்னா என்ன? என்னால வாழ முடியாதா? இதென்ன அவ்வளவு பெரிய விஷயமா?" என்று இலட்சியத்தையே காலில் போட்டு மிதிப்பீர்கள். பதினெட்டு முறை படையெடுக்கும் ஆர்வம், ஆவேசம், வெறி, தீர்மானம் உங்களிடம் உண்டா? உண்டு என்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.
அந்தத் திருக்கோட்டியூர் நம்பி மனசைக் கரைக்கச் சாகும்வரை உண்ணுவதில்லை என்று சாதனை செய்தார் இராமானுஜர். அவர் இறந்துவிடுவாரோ என்று அஞ்சி குருவிடம் பலர் போய் தகவல் தந்தனர். "செத்து மேலே போனால் நாராயணனே மந்திரம் சொல்வார். தப்பி உயிர்பிழைத்தால் நான் சொல்லுவேன்" என்று உறுதி காத்தார் குருநாதர். முடிவில் மனமிரங்கி உபதேசித்தார். இராமானுஜர் வெற்றி பெற்றார். ஒன்றும் வேண்டாம் என்று உதறிவிட்டுப் போன ஒரு சாமியாருக்குள் இவ்வளவு பிடிவாதம், உறுதி, வெறி இருக்கிறதே... எல்லாம் வேண்டும் என்று ஆசைப்படும் உங்களுக்குள் உறுதி, வெறி ஏன் இல்லை? இருக்கிறதா? அப்படியானால் நீங்கள் ஜெயிப்பது நிஜம். ஒன்றை அடையும் வரை ஓயாதீர்கள். பின்வாங்காதீர்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள்.
'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்'...
யார்? 'திண்ணியர்' என்கிறார் திருவள்ளுவர். நீங்கள் திண்ணியரா?
சரி... உங்களுக்காக ஒரு இன்னொருவர் இல்லத்தார் வெற்றிக் கதையைச் சொல்கிறேன்.
வியாபாரத்தை 21 வயதில் தொடங்கினான் அந்த இளைஞன். தோற்றுப் போனான். மாகாண சபைக்குப் போட்டியிட்டான். மண்ணைக் கவ்வி னான். தொழிலிலும் தோல்வி. காதலியும் மறைந்தாள்... அவன் அசரவேயில்லை. நரம்புத் தளர்ச்சி அவனுள் நாட்டியம் நடத்தியது. போராடி மீண்டு மறுபடியும் தேர்தலில் குதித்தான். தோல்விதான் அவனைத் தழுவியது. முதலில் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி. பின்னர் மக்கள் மன்றத் தேர்தலிலும் தோல்வி. நாற்பத்து ஏழாவது வயதில் துணை ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டுத் தோல்வி மேல் தோல்வி. ஆனால் 52வது வயதில் ஜனாதிபதித் தேர்தலில் குதித்தான். வெற்றி அவனை முத்தமிட்டது. அதன் பிறகு அவன் புகழ் உலகெங்கும் பரவியது. அவன் தொட்டது துலங்கியது. அவனது பெயரை உலகில் உள்ள எல்லா நாடுகளின் வரலாற்று ஆசிரியர்களும் உச்சரித்தனர்.
உலக வரலாற்றிலேயே அவனுக்கென்று ஓர் அத்தியாயம் ஒதுக்கப்பட்டது. அவன் பெயர்... மன்னிக்கவும்... அந்த மாமனிதர் பெயர் ஆப்ரஹாம் லிங்கன். அவனுள் கனிந்த அக்கினி ஆங்கிலத்தில் சொன்னால் AGONY உங்களுக்குள் இருக்கிறது. தப்பில்லை. இந்த நியாயமான வெறி கனிந்தால் வெற்றி நிச்சயம்.

# இன்றைய நாள்

**மேடம்:** முயற்சிகளால் முன்னேற்றம் அதிகரிக்கும் நாள். பரபரப்பு கூடும். போன் மூலம் எதிர்பாராத தகவல் வரும். மனச்சோர்வு நீங்கும். பெற்றோர் உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** நம்பிக்கை இழந்த விஷயம் இன்று நடப்பதால் மகிழ்வீர்கள். உடல் நலம் சீராகி உற்சாகம் ஏற்படுத்தும். சுகம் கூடும். பொய் பேசியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** கடன் சுமை குறைய புதிய வழிகளைக் கையாள்வீர்கள். பணியாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். உழைப்பு கூடும். கேட்ட சலுகைகள் கிடைக்கும். பணக்கவலை தீரும்.

**கடகம்:** மின்னஞ்சல் மூலம் அதிர்ச்சி தரும் தகவல் வரும். வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வீர்கள். இளமை திரும்பும். பணியிடத்தில் சில சாதனைகள் செய்து காட்டுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்:** வரவேண்டிய பாக்கி வசூலாகும். வருமானம் திருப்தி தரும். பிறர் சார்பில் நீங்கள் கொடுத்த வாக்கால் சிரமம் ஏற்படும். வம்பு பேசாதீர்கள். எந்தப் பெரிய முடிவும் எடுக்க வேண்டாம்..

**கன்னி:** மனக்கவலைகள் சற்றுக் குறைந்திருக்கும். நோய் தீரும். நட்பால் நல்ல விஷயம் நடைபெறும். நன்மைகள் ஏற்படும். வாக்குறுதியைக் காப்பாற்ற நண்பர்கள் ஒத்துழைப்பார்கள்..

**துலாம்:** உடன் பிறந்தவர்கள் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். கட்டடப் பணி நல்ல விதமாக நடைபெறும். உடல் நலம் சரியாகும். வருமானம் சீராகி உற்சாகப்படுத்தும். தெய்வ பலம் கூடும்.

**விருச்சிகம்:** அனுபவம் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னனியாக இருப்பர். நண்பர்கள் ஆதரித்து உதவுவார்கள். அரசு அதிகாரிகள் சில விஷயங்களை முடித்துக் கொடுப்பர்..

**தனுசு:** வருங்காலத்திற்காக சிறிது சிறிதாகச் சேமிக்க முற்படுவீர்கள். புதிய எலக்ட்ரானிக் பொருள் சேர்க்கை ஏற்படும் நாள். மாற்றுக் கருத்துடையவர்கள் மனம் மாறுவார்கள்.

**மகரம்:** தந்தை உடல் நலனில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். புகழ் மிக்கவர்களின் புதிய ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு வாங்கும் யோகம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை.

**கும்பம்:** பணி சம்பந்தமாக மாற்றங்கள் பற்றித் தகவல் வரும். விரும்பிய, விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள். முயற்சி தாமதப்படும்.

**மீனம்:** புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். நண்பர்களிடம் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. முடிந்துவிடும் என நினைத்த விடயத்தில் தடைகள் வரலாம்.

# எதிர்வரும் நாள்கள் மிகச் சவாலானவை

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை



கொழும்பு, ஒக்.31
நாட்டில் எதிர்வரும் மூன்று நாள்கள் மிகச் சவாலானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி செயற்பட வேண்டும். அத்துடன் திருமண விழாக்கள், சுற்றுலா செல்லுதல், திருவிழாக்களில் பங்கேற்றல் உட்பட ஒன்று கூடல்களைத் தவிர்க்க வேண்டும்.

ஊரடங்கு அமுலில் இல்லாத பகுதிகளில் உள்ள மக்கள் உட்பட அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்துள்ளார். (ந-இ)

# 22 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஒக்.31
பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் உட்பட மொத்தம் 22 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் பொலிஸ் அதிக்ாரிகளுக்கு தனி தனிமைப்படுத்தல் நிலையங்கள் உள்ளன. வைரஸ் பாதிப்புக்குள்ளான பொலிஸாருக்கு சிகிச்சை அளிக்க புனானை மற்றும் குண்டசாலை ஆகிய பகுதிகளில் சிறப்பு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 400 க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதே நேரம் ஏனைய பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா பரவாமல் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ந-இ)

# பாதுகாப்பு அதிகாரிகள் நால்வருக்கும் தொற்று

கொழும்பு, ஒக்.31
நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் திணைக்கள பிரதான அலுவலகத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் 4 பேருக்கும் தொழில் அமைச்சின் சாரதி ஒருவருக்கும் கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்ற அந்த திணைக்கள கட்டடத்தின் உணவக பணியாளரிடம் இருந்து அவர்களுக்கு கொரோனா பரவியிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. (ந-இ)






# மேல் மாகாணத்தின் பள்ளிவாசல்களுக்கு பூட்டு

கொழும்பு, ஒக்.31
மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் கலாசார விவகார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் வழி காட்டுதல்களுக்கு அமைய வக்பு சபையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல்களைத் திறப்பது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெர்விக்கப் பட்டுள்ளது. (ந-இ)

# கடலுணவுகளால் கொரோனா பரவாது

## கூறுகின்றார் கடற்றொழில் அமைச்சர்



கிளிநொச்சி, ஒக். 31
மீன் மற்றும் கடலுணவுகளைச் சாப்பிட்டால் கொரோனாத் தொற்று ஏற்படும் என்று மருத்துவர் ஒருவர் கூறினாரன்று மக்கள் மத்தியில் அச்சம் நிலவிவருகிறது. இது தேவையற்ற அச்சம். கடலுணவுகள் மூலம் கொரோனா பரவும் என்று எவரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தாக்கத்தால் தொழில் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடந்த கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கொரோனா பரவலுக்குக் காரணமானதாகக் கூறப்படும் வைரஸ் மனித உடல் மூலமே பரவும் என்று மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மீன்களின் உடம்பில் கொரோனா வைரஸ் இருக்கும் என்று அச்சப்படுவது அர்த்தமற்றது.

கொரோனா பாதிப்புக்கு உள்ளான ஒருவர் மீனையோ அல்லது கடல் உணவு வகைகளையோ கையாண்டிருந்தால் மாத்திரமே அதில் வைரஸ் தாக்கம் இருக்க முடியும். ஆனால், நன்கு சமைத்த பின்னர் வைரஸ் அதில் தொடர்ந்தும் இருப்பதற்குச் சாத்தியமில்லை. இப்படிப் பார்த்தால் மரக்கறி வகைகளிலும் கொரோனா வைரஸ் தாக்கம் இருக்கமுடியும் என்றல்லவா கருதவேண்டும்? எனவே, தேவையற்ற அச்சத்தைக் கைவிட்டுவிட்டு கடலுணவுகளை மக்கள் தொடர்ந்தும் உட்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், கிளிநொச்சி மாவட்டச் செயலர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டச் செயலர்களின் பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். (து-இ)

○ ஏ.நிக்ஷன்



# ஒற்றையாட்சி இலங்கையை அமெரிக்கா ஆரத்தழுவுகிறது

## "இலங்கை ஆசியாவின் வயது முதிர்ந்த ஜனநாயகம்" என்று மைக் பொம்பியோ புகழாரம்

ஆசிய நாடுகளுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலும், தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலும் வரிக்குவரி இலங்கையின் இறைமை என்ற சொல்லாடலை உச்சரித்திருக்கிறார்.

பலமான இறைமை பொருந்திய இலங்கை உலகத்துக்குத் தேவை என்று அவர் கூறியுள்ளார். ஜனநாயகப் பண்புள்ள முழுமையான சுதந்திரமும் இறைமையுமுள்ள இலங்கையோடு நட்பைப் பலப்படுத்தவே அமெரிக்கா விரும்புகிறது என்றும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

### ஜனநாயகப் போர்வையை போர்த்திச் சென்ற பொம்பியோ

இலங்கையை ஆசியாவின் மிகவும் வயது முதிர்ந்த ஜனநாயகம் என்று வர்ணித்த மைக் பொம்பியோ, அமெரிக்க-இலங்கை உறவுக்கு 72 வயதெனவும் அந்த 72 ஆண்டுகள் பூர்த்தியடைவதற்கு இன்னமும் ஒரு நாளே இருப்பதாகவும் அந்த ஒரு நாளுக்கு முன்னர் இலங்கை வந்ததையிட்டுத் தான் குதூகலிப்பதாகவும் கருத்து வெளியிட்டார். ஆனால் மைக் பொம்பியோ எந்தவொரு இடத்திலும் தமிழ் மக்கள் என்றோ, இலங்கை அரசின் மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் என்றோ எதுவுமே உச்சரிக்கவில்லை.

மாறாக எல்லோரும் இலங்கையர் என்றும் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் நாடு எனவும் அதனை அமெரிக்கா விரும்புவதாகவும் வர்ணித்திருக்கிறார். அதாவது இனங்கள் என்பதைவிட மதங்களுக்கிடையேயான நல்லிணக்கம் என்பதை வலியுறுத்துவதாகவே மைக் பொம்பியோவினுடைய தொனி இருந்தது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரான சூழலில், இலங்கையில் மத நல்லிணக்கம் அவசியம் என அவர் கூறியிருக்கிறார். ஆனால் 2009க்குப் பின்னரான காலத்தில் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த எந்தவொரு வார்த்தைகளையும் அவர் வெளிப்படுத்தவேயில்லை.

அதேவேளை, இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாகச் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர், அது ஒரு சிறப்பான உரையாடல் என்று வர்ணித்தார். அமைதியான, சுபீட்சமான, இறைமையுள்ள இலங்கையோடு அமெரிக்கா உறவைப் பேணவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு மற்றும் இலங்கைப் படையினருடனான கூட்டுப் பயிற்சிகள், ஒத்துழைப்புகள் மற்றும் நீண்டகால அபிருத்திகள் குறித்தும் கோத்தாபய ராஜபக்ஷவுடன் தான் பேசினார் எனவும் மைக் பொம்பியோ விளக்கமளித்துள்ளார்.

கொரோனா பரவல் காலத்தில் ஆறு மில்லியன் டொலர்களை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியிருந்ததென்றும், வைரஸ் பரவல் காலத்தில் அமெரிக்காவுக்குத் தேவைப்பட்ட கொள்வனவு உதவிகளை கொழும்பு செய்தது எனவும் கூறினார். குறிப்பாக உயர் தரம்மிக்க பாதுகாப்பு அணியங்களை இலங்கை தயாரித்து அமெரிக்காவுக்கு அனுப்பியது எனவும் மைக் பொம்பியோ தெரிவித்தார்.

### ஆசிய வல்லாதிக்கச் சீண்டல்.

அதேவேளை, சீனக் கமியூனிசக் கட்சி ஒரு வேட்டையாடும் சக்தி என்றும் ஆனால் அமெரிக்கா நட்புச் சக்தியென்றும் அவர் வாதிட்டார். இந்த வாதம் சீனாவின் இலங்கைக்கான தூதராலய வட்டாரங்களில் கடும் கோபத்தைத் தோற்றுவித்திருக்கிறது. சீன நிறுவனங்களை விட அமெரிக்க நிறுவனங்கள் இந்தப் பூமிப் பந்திலேயே மேலானவையென்றும் அவை வெளிப்படைத் தன்மையில் சிறந்து விளங்குபவை என்றும் தனது நாட்டுக்குத் தானே புகழாரம் சூட்டிக் கொண்டார் பொம்பியோ.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் செயற்பாடுகளை மிகவும் மெச்சிய அவர், இலங்கையுடனான நட்பைத் தனது தூதரகம் அண்மையில் மேம்படுத்தியுள்ளது எனவும் வர்த்தக சமூகத்தோடும் அமெரிக்க உறவை அது பேணி வருகிறது எனவும் சமூக வலைத்தளத்தில் கருத்து வெளியிட்டார்.




ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின்போது கொழும்பில் நின்று கொண்டு சீனாவை மிரட்டிய மைக் பொம்பியோ, இலங்கையுடன் மிகவும் அன்பாகவும் நிதானமாகவுமே கலந்துரையாடியிருக்கிறார். அவரது கருத்துக்கள் எல்லாம் அமெரிக்காவை இலங்கையில் சந்தைப்படுத்தும் விளம்பரம்போன்று அமைந்திருந்தன.


இதேவேளை, மைக் பொம்பியோவின் வருகை குறித்து விளக்கமளித்த கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிஸ், பலமான, உள்வாங்கும் தன்மையுள்ள, இறைமை கொண்ட நாடு இலங்கை என்று சிலாகித்தார்.

ஆக, இலங்கையை அமெரிக்கா அரவணைத்தது மாத்திரமல்ல, இலங்கை என்ன உதவி கோரினாலும் அதனைச் செய்வதற்கும் தயராகவே இருப்பதை மைக் பொம்பியோ கொழும்பில் வெளியிட்ட கருத்துக்கள் கோடிகாட்டுகின்றன. இலங்கையோடு மிகவும் பணிவாகவேமைக்பொம்பியோ உரையாடியிருக்கிறாரென்று கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். ஆயினும் கொழும்பில் இருந்து இயங்கும் சர்வதேச செய்தி நிறுவனங்களின் நிருபர்கள் அமெரிக்க சீன ஏகாதிபத்தியப் போட்டியை மையப்படுத்தியே தமது செய்திகளை வெளியிட்டிருக்கின்றனர். இதனால் அமெரிக்கா- இலங்கை மீது அழுத்தம் ஏற்படுத்தியிருப்பது போன்ற ஒரு மாயை தமிழர்களிடையே தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அரசியல் அவதானிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

புவிசார் அரசியல் தமிழர்களுக்குச் சார்பாக மாறப்போகிறதென்றும் சீனாவுக்கு எதிரான மேற்குலகம், தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கப் போகிறது எனவும் போலியான கருத்துருவாக்கங்களை மேற்கொண்டு வரும் தமிழக, ஈழ அரசியல் ஆலோசகர்களுக்கும் தேர்தல் அரசியல்வாதிகளுக்கும் கன்னத்தில் அறைந்துவிட்டுச் சென்றிருக்கிறார் மைக் பொம்பியோ என்று அவதானிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

வழமையாக இலங்கைக்கு வரும் மேற்குலக இராஜதந்திரிகள் தமிழர் தரப்பையும் சந்திக்கும் நடைமுறை இம்முறை கடைப்பிடிக்கப்படவில்லை என்பதையும் கூர்மையாக ஈழத் தமிழர்கள் அவதானிக்க வேண்டும். அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாக ஆசியாவுக்கான பொம்பியோவின் திக் விஜயம் நடைபெற்றிருக்கிறது.

மைக் பொம்பியோவுடன் இந்தியாவுக்கு உயர்மட்டச் சந்திப்புக்காக வந்திருந்த அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் மார்க் எஸ்பர் இலங்கைக்கு வரவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இலங்கைக்குப் பின்னர் மாலைதீவுக்குச் சென்று அதன் தொடர்ச்சியாக இந்தோனேசியாவுக்கு மைக் பொம்பியோ பயணமாகவுள்ளார்.



# வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாகப் பூட்டு

வவுனியா, ஒக்.31

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் தொடர்ச்சியாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 5 நாள்களாக நெடுங்கேணி பிரதேசம் மக்கள் நடமாட்டம் இன்றிக் காணப்படு கின்றது.

வவுனியா நெடுங்கேணியில் வீதி அபிவி ருத்திப் பணிகளில் ஈடுபட்ட 14 ஊழியர்க ளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து நெடுங்கேணி, அதனை அண்டியுள்ள பிரதேசங்கள் மற்றும் வீதி அபிவிருத்திப் பணி மேற் கொள்ளப்படும் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுமாறு சுகாதாரப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கடந்த 25 ஆம் திகதியிலிருந்து அந்தப் பகுதியி லுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட் டுள்ளன.

இந்த நிலையில் சமூகப் பரவலைத் தடுப் பதற்காக சுகாதாரத் திணைக்களத்தினர் வீதி அபிவிருத்தி பணியை மேற்கொண்ட 82 நபர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். (ந-18)

# பொறுப்புக் கூறவேண்டியது இலங்கைத் தமிழர்களிடமே!

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31

**இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டியது இலங்கைத் தமி ழர்களிடமே தவிர சர்வதேசத்திடம் அல்ல என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.**

கொன்றொழிக்கப்பட்ட தமிழினத்தின் தியா கங்களில் ஏறி நின்று பிராந்திய சர்வதேச சக்திகள் செயலாற்ற முனைவதை நாம் நிராகரிக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

தமிழர்கள் இலங்கையில் ஆயுத ரீதியாக பலம் பெற்றிருந்தபோது இனப் பிரச்சினை தொடர்பாக காத்திரமாக செயலாற்றிய சர் வதேச நாடுகள் 2009 போரின் இறுதியில் இலட்சக்கணக்கான மக்கள் போரவலத் தில் அகப்பட்டு, நிர்க்கதிக்குள்ளாகி கொல் லப்படும் போது, அர்த்தமுள்ள வகையில் செயற்பட்டு எமது மக்களையாவது பாது காப்பாக மீட்டெடுக்கும் வகையில் மனி தாபிமானமாக சர்வதேச சட்டங்களை பயன்படுத்தாமல் போனதற்கான காரணி களை ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும் இப்போதாவது வெளிப்படுத்த வேண்டுமென மிகமோசமான போரவலத் தைச் சந்தித்தவர்கள் என்கின்ற உரித்து டன் கேட்டு நிற்கின்றோம்.

சர்வதேசம் கை கொடுக்காவிட்டால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையா? இருக் கிறது அதன் அளவுகோல் என்ன அதனை எவ்வாறு சாத்தியமாக்குவது எந்தவகை யில் சென்றடைவது. இவை அனைத்துக் கும் இருபதாவது திருத்தம் எந்தவகையில் வலுச்சேர்த்திருக்கிறது. என்பதை சட்ட மேதைகளுடன் விவாதிக்காமல் எமது மக் களுடன் பேசுங்கள்.

அவர்களுக்குத் தெரியும் சாத்தியமானது எது என்று எமக்கான தீர்வு எமக்குள் உரு வாகாதவரை வலுவற்ற இனக்குழுமமா கவே நோக்கப்படுவோம். இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டியது இலங்கை தமிழர்களிடமே தவிர சர்வதேசத்திடமல்ல எனத் தெரிவித்தார். (ந-150)


# இனந்தெரியாதவரால் குடும்பப் பெண் தாக்கப்பட்டார்

கொடிகாமம், ஒக்.31

வீதியால் நடந்து சென்ற குடும் பப் பெண் ஒருவரை இனந் தெரியாத நபர் ஒருவர், தடி யால் தாக்கியதில் அவர் மயங் கிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் ஏ-9 வீதியி லுள்ள கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

கொடிகாமம் மருதடிப் பிள் ளையார் கோவிலடியில் வசிக் கும் சுதாகரன் அழகேஸ்வரி (வயது32) என்பவரே இவ் வாறு தாக்குதலுக்குள்ளாகி யுள்ளார். அந்தப் பெண் உடல் முழுவதும் அடிகாயங் களுடன் வீதியில் மயங்கிய நிலையில் இருந்தபோது, வீதியால் சென்ற இளைஞர் ஒருவர், வீதியால் சென்ற வேறு பெண்களின் உதவியுடன் சாவகச்சேரி ஆதார வைத்தி யசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார் எனத் தெரியவரு கின்றது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-159)



# மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஒக்.31

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட இயங்கராவூர் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கடத்திச் செல் லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை பூவர சங்குளம் விசேட அதிரடிப் படையினர் நேற்று அதிகாலை கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் பகுதியில் முதிரை மரங்கள் கடத் தப்படவுள்ளன என பூவரசங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவ லையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்த அவர்கள் முதிரைக் கடத்தலை முறியடித்த னர்.

இந்தச் சம்பவத்தில் 8 இலட்சம் ரூபா பெறுமதியான 7 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை கடத் திச்செல்லப் பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட முதிரைக் குற் றிகளும், வாகனமும் வவுனியா பூவரசங் குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை பூவரசங்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ந-ரி3)

# மாப்பிள்ளை டென்மார்க்கில் மணப்பெண் யாழில்

## 'சூம்' மில் டும்...டும்...டும்...

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்ப்பாணத்திலுள்ள பெண் ஒருவருக்கும், டென்மார்க் கிலுள்ள புலம்பெயர் தமிழ் இளைஞருக்கும் சூம் செயலி யில் திருமணம் இடம்பெற்றது. இதன்படி சூம் தொழில்நுட் பத்தில் பெண்ணுக்கு, டென்மார்க் மாப்பிள்ளை தாலி கட்டினார்.

உரும்பிராயைச் சேர்ந்த பெண்ணுக்கும் டென்மார்க்கில் வதியும் ஊரெழுவைச் சேர்ந்த இளைஞனுக்குமே இவ் வாறு சூம் செயலி மூலம் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் திருமணம் நிச்சயதார்த்தம் நிச்ச யிக்கப்பட்டது. கொரோனா ஊரடங்கு காரணமாக மண மகன் இலங்கைக்கு வருவதில் சிரமமிருந்தது. இதனால் பல மாதங்களாக திருமணம் பிற்போடப்பட்டது.

இந்த வருட இறுதியில் இலங்கை நிலவரம் சுமுகமாகும் என எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், இலங்கையில் கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் தீவிரமாகி மீண்டும் நிலைமை மோசமாகியுள்ளது. பெண்ணின் சாதகப்படி இந்த வருட இறுதிக்குள் திருமணம் செய்ய வேண்டுமென பெண்ணின் பெற்றோர் அழுங்குப்பிடி பிடித்ததையடுத்து, சூம் தொழில் நுட்பத்தில் தற்போது தாலி கட்டிக் கொள்வதென்றும், அடுத்த ஆண்டில் பதிவுத் திருமணம் செய்து கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ந-இ)




# வெள்ளத்தால் பத்து குடும்பங்கள் பாதிப்பு

சாவகச்சேரி, ஒக்.31

பூநகரிப் பகுதியில் கடல் பெருக்கெடுப்பால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக, கடலோரப் பகுதிக் குள் திடீரென வெள்ளம் புகுந்ததில், சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கோயிற்குடியி ருப்பு பகுதியில் இடம்பெற்றது.

மழை, காற்று ஏதுவும் இல்லாத நிலையில், திடீரென வெள்ளம் காணிகள் மற்றும் வீடுகளுக்குள் புகுந்தது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அயலிலுள்ள வீடுக ளில் தஞ்சமடைந்தனர். (ந-9)





# நாடு நலன்பெற முத்துக்கலசம்

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பிறந்த தினத்தை முன்னிட்டும், கோவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டுக்கு நலம் வேண்டியும் முத்துக் கலசம் ஒன்று சோமாவதி விகாரையில் வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்.குடாநாட்டின் முதுகெலும்பாக கூட்டுறவு மீண்டும் வளர வேண்டும்

## அனைவரையும் ஒத்துழைக்குமாறு யாழ். மாவட்டச் செயலர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக்.31**

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் முதுகெலும்பாக கூட்டுறவுத்துறை மீண்டும் மாறவேண்டும் என்றால், அதற்கு நாம் அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

கூட்டுறவினூடு கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் எனும் தொனிப் பொருளினாலான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் கூட்டுறவுத் துறையில் உள்ள சிக்கல்கள், குறைபாடுகள் போன்றன கூட்டுறவுச் சங்கங்களினால் மாவட்டச் செயலருக்கு சுட்டிக்காட்டப்பட்டன. இயந்திரங்களின் கோளாறு, பொருள்களின் உற்பத்திக்கு ஏற்ற இயந்திரங்கள் இல்லாமை, மூலப் பொருள்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள், சந்தைப்படுத்துவதற்கு போதிய ஆளணிகள் இல்லாமை, பொருள்களை இறக்குமதி செய்வதில் உள்ள தடைகள் போன்ற பல விடயங்கள் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டன.

இதனை அடுத்து கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது;

கூட்டுறவு அமைப்பானது கடந்த காலங்களில் வினைத்திறன் மிக்கதாக இயங்கியது. யாழ் மாவட்டத்தின் பொருளாதாரத்தைத் தாங்கி, ஒரு காலத்தில் குடாநாட்டின் முதுகெலும்பாக கூட்டுறவுத் துறை இருந்தது. ஆனால் கால ஓட்டத்தில் அது சிக்கி சின்னா பின்னமாகி தற்போது பலவீனமடைந்துள்ளது. இதற்கு பல காரணங்கள் உண்டு. குறைபாடுகளைப் பற்றி அனைவரும் பேசுகின்றனர். அந்தத் துறையின் குறைபாடுகளை ஆராய்ந்து, அதை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்று சிந்திக்க வேண்டும். எதிர்காலத்தில், கூட்டுறவுத் துறை, யாழ்ப்பாணத்தின் முதுகெலும்பாக மீண்டும் மாறவேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். பாடுபட வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-ரி4)

# கிராமத்தலைவர் பதவி பறிப்பு!

புதுக்குடியிருப்பு, ஒக்.31

கிராம அலுவலர்களை இடம்மாற்ற வேண்டாம் என்று கோரிக்கை விடுத்த கிராம அமைப்புக்களின் ஒன்றான மாணிக்கபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 6 கிராமங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அந்த இடமாற்றங்களை இரத்துச் செய்யுமாறு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தன. அவற்றில் ஓர் அமைப்பான மாணிக்கபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பதவியே பறிக்கப்பட்டுள்ளது. (ப-19)

# காயங்களுடன் மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி ஒக் 31 .

தாக்குதல்களால் காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடுக்கல் வாங்கல் பிரச்சினையில் மோதிக் கொண்ட பளை மற்றும், பூநகரியைச் சேர்ந்த இருவர் நேற்றுமுன்தினமும், காணித் தகராறு காரணமாக ஏற்பட்ட தகராற்றில் கச்சாய் தெற்கைச் சேர்ந்த 62 வயது முதியவர் நேற்றுக் காயமடைந்த நிலையிலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ப-9)

# பாதீட்டை நிறைவேற்ற அதிகாரம் பயன்படலாம்

## சந்தேகம் வெளியிட்டனர் சாவ.வரியிறுப்பாளர்கள்

சாவகச்சேரி. ஒக் 31

சாவகச்சேரி நகரசபையின் அடுத்த வருடத்திற்கான உத்தேச பாதீடு வரைவு கடந்த வருடம் போன்று இவ் வருடமும் தவிசாளரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படலாம் என்று வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

சபையின் அடுத்த வருடத்துக்கான உத்தேச பாதீடு வரைவு தொடர்பாக அண்மையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது அனைத்து உறுப்பினர்களும் மௌனமாக இருந்துள்ளனர் . இவர்களின் மௌனச் செயற்பாடு கடந்த ஆண்டு போன்று பாதீட்டைத் தோற்கடிக்கத் திட்டமிட்டுள்ளனரா எனச் சந்தேகம் எழுந்துள்ளது என வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

பாதீடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது உறுப்பினர்கள் எந்தவொரு எதிர்ப்போ அல்லது ஆலோசனையோ வழங்கவில்லை. அடுத்த அமர்வில் பாதீடு சபையில் சமர்ப்பிக்கும்போது உறுப்பினர்களின் நிலைப்பாடு தெரியவரும்- என்றார். (ப-9)

# வேலை வாய்ப்புத்திட்டத்தில் தமிழருக்கு ஏமாற்றமாம்

## பிள்ளையானின் காரைதீவு அமைப்பாளர் கண்டுபிடிப்பு

அம்பாறை, ஒக்.31

அரசாங்கத்தால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு இலட்சம் இளையோருக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் முதல் கட்டம் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் காரைதீவு பிரதேச அமைப்பாளர் க. குமாரசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிரதேச செயலகங்களூடாகவே நியமனங்களுக்கான தெரிவுகள் இடம்பெறும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. பிரதேச செயலகங்கள் நீதி, நேர்மையான முறைகளில் சிபாரிசுகளை முன்வைத்திருந்தன. ஆனால் பிரதேச செயலகங்களால் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கு பதிலாக அரசியல்வாதிகளால் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது கணிசமான இளையோர்களின் உள்ளங்களில் பாரதூரமான உளைச்சல்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இரண்டாம் கட்டத்தின் போதாவது பிரதேச செயலகங்களால் சிபாரிசு செய்யப்பட்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலேனும் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கை ஆகும் என்றார். (ப)

# ஒருவர் கைது

பளை, ஒக்.31

பளைபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வாள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே மறைத்து வைக்கப்பட்ட வாள் மீட்கப்பட்டது. அதை மறைத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ப)

### தனிமைப்படுத்தப்பட்ட

# 10 குடும்பங்களுக்கு உலர் உணவுகள்

வவுனியா, ஒக்.31

வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரில் 10 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா நோய்த் தொற்றாளர்கள், சந்தேகத்துக்குரியவர்கள் தத்தமது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குமாறு கிராம அலுவலகரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நேற்று 10 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் தமிழ் விருட்சம் அமைப்பினால் வழங்கப்பட்டன. (ப)

### '20' க்கு ஆதரவு;

# முஸ்லிம் எம்.பிக்கள் மத்தியில் உந்துதலை உருவாக்கினோம்


## அனைத்துக் கட்சி ஒன்றிய தலைவர் நிசாம் பெருமிதம்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்கிற உந்துதலை முஸ்லிம் எம்.பிக்களுக்கு அனைத்துக் கட்சிச் செயற்பாட்டாளர்கள் ஒன்றியம் உருவாக்கி இருந்தது என்று இதன் தலைவர் முஹமட் முஸ்தபா முஹமட் நிசாம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்துள்ளமை பெருமகிழ்ச்சி தருகின்றது. இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தெளிந்த சிந்தனை, தூர நோக்கு, தீர்க்க தரிசனம் ஆகியவற்றுடன் செயற்பட்டுள்ளனர். 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குங்கள் என்று அனைத்துக் கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியம் முஸ்லிம் எம்.பிக்களைப் பகிரங்கமாகக் கோரியிருந்தது. இதன் மூலமாக அரசாங்கத்தின் கருணை கூர்ந்த பார்வை கிடைக்கும் என்று காரணம் சொல்லியிருந்தது. இத்திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தமைக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரவர் பாணியில் விளக்கங்களை ஊடகங்கள் மூலம் மக்களுக்கு கூறி வருகின்ற போதிலும் அரசாங்கத்துக்கு நல்லெண்ண சமிக்ஞையை வழங்கி இருக்கின்றனர் என்பதே உண்மை - என்றார். (ப)

## பதினாறாம் ஆண்டின் நினைவேந்தல்...



மனம்மகிழ
25 . 06 . 1946

மனம்நெகிழ
27 . 10 . 2004

அமரர்

### சுப்பிரமணியம் செல்வராசா

(உரிமையாளர் - வாணிரெக்ஸ் - சாவகச்சேரி)


ஆண்டுகள் பதினாறு வேகமாக கடந்தாலும்
ஆறவில்லை உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சமதில்...
குடும்ப விளக்காய் பிரகாசித்த நாள்கள்
தீராத வடுவாக இன்றும் வலிக்கிறது
மண்ணில் எவர்க்கும் உதவிடும் உன்னதமானவரே...
எங்கு சென்றீர்? எமை அபலைகளாக தவிக்கவிட்டு...
நீர் இல்லாத வறண்ட ஆறாக எம்மிதயம்
நின் வரவு மீண்டிட வேண்டியே தினமும் துடிக்கிறது.

ஆத்ம சாந்திக்காக மன்றாடும்

கென்ஸ்மன் லேன்,
டச்சு வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி கமலாம்பிகை (அம்மாச்சி) வேலாயுதபிள்ளை

யாழ். சாவகச்சேரி கோவில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை வேலாயுதபிள்ளை கடந்த (28.10.2020) புதன்கிழமை அன்று அதிகாலை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் செல்லம்மா தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையாபிள்ளை சொர்ணம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (Sinnaiah pillai & Sons- Colombo-11) அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சொர்ணகாந்தா, செல்வகாந்தா, திருக்குமார், மகேந்திரன், நிர்மலா ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, சுந்தரகலா, பஞ்சாட்சரம், ஜெயலஷ்மி, தயாநிதி, இராமநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நகுலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி, இரத்தினவடிவேல், செல்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மீனாவின் வளர்ப்புத் தாயாரும், தஷாணி, திருமால், முரளிகிருஷ்ணா, செந்தூரன், நரேந்திரன், மயூரன், அரவிந்தன், கார்த்திக், சங்கவி, விஷ்ணுகன், அரிச்சனா, கீர்த்தனா, கீர்த்திகா, கீத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தினேஷ், விதுஷா, ஜெயந்தன், ருத்திரன், துறாவன், அக்ஷரா, அர்ஜுனன், ஜஸ்டின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருக்குமார் - மகன் - +16478547006
மகேந்திரன் - மகன் - +16473395639
செந்தூரன் - பேரன் - +14167227949

தகவல்:
குடும்பத்தினர்.
+14165466135

# மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் புரண்டது



திருகோணமலை, ஒக்.31

திருகோணமலை ஹொரவ் பொத்தானை பிரதான வீதிநொச்சி குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சிறுவனொருவன் படுகாயமடைந்தான். மணல் ஏற்றிக் கொண்டு சென்ற லொறியின் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டமையால் சிறுவன் பயணித்த துவிச்சக்கரவண்டியுடன் லொறி தட்டுப்பட்டதனால் விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த. இ)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

This refers to our advertisement dated 17.09.2020 for the post of Technical Officer (ICT) Grade III.

The Scheme of Recruitment for the post of Technical Officer (ICT) Grade III has been amended as per the Commission Circular No: 21/2018(I) dated 16.10.2020 as follows. Other conditions will remain unchanged as in the above advertisement dated 17.09.2020.

*Please note that applicants who have already applied as per external advertisement (17.09.2020) need not apply again.*

**1. TECHNICAL OFFICER (ICT) GRADE III**

**Qualifications:**

(i) Should have passed in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in any Stream

AND

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Information Communication and Multimedia Technology / Information and Communication Technology / Information Technology or Equivalent.

* Preference will be given for who have work experience in ICT

Salary Scale : U-MT 1(IIIA)
Rs.31, 625-7x300; 10x355-37,275 p.m.
Selection By : Written and/or practical test and an interview
Age : Not less than 18 years and not more than 45 years
Note : Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment Trust Fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form, University specified pay-in-voucher and particulars for the above post can be downloaded only from the University website www.jfn.ac.lk

Applicants should deposit Rs.100.00 at any branch of the People's Bank in favour of "University of Jaffna" Account No. "162-1-001-6-0000880". Applications must accompany with the proof of payment of Rs.100.00 in the University specified pay-in-voucher and copies of relevant certificates.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar/Non-Academic Establishments, University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, Jaffna on or before 06.12.2020.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
27.10.2020

# இறுதித் தாய் இருக்கும் வரை போராட்டம் தொடரும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அறைகூவல்

வவுனியா, ஒக். 31

காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகளின் இறுதித் தாய் இறக்கும் வரையில் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றுக் கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது

எங்களுக்கான நீதி எப்போது கிடைக்கும், அதனை யார் பெற்றுத் தருவார்கள் என்ற ஏக்கத்தில் நாங்கள் வீதிகளில் காத்திருக்கின்றோம். எமது இந்தப் போராட்டம் தீர்வு கிடைக்கும்வரை தொடரும் என உலக நாடுகள் மாத்திரமல்ல சர்வதேசத்தில் வாழும் உறவுகளுக்கும் தெரியும். சர்வதேச நாடுகளில் வாழ்கின்றவர்கள் எங்களுக்காக குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடும், எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையோடும் நாங்கள் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

சென்ற ஒருசில நாட்களுக்கு முன் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டிருந்தபோதும் இந்தக் கொடிய நோயின் காரணமாக அவரை சந்திக்க முடியாமல் போயுள்ளது. இந்த நிலையில் எமது நீதிக்கான கோரிக்கையை அவரிடம் கையளித்துள்ளோம். எமக்கான நீதியைப் பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. கிளிநொச்சியில் மாத்திரமல்ல பல பகுதிகளிலும் மாதாந்தம் 30ஆம் திகதி இந்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இறுதித் தாய் இருக்கும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும். கொரோனாப் பெருந்தொற்று, இராணுவம், இராணுவபுலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் என எதுவந்தாலும் போராட்டத்தைக் கைவிட்டபோவதில்லை என்றனர். (ம110,26,றி3)

# துருக்கியில் நிலநடுக்கம்: கிரீஸ் நாட்டில் சுனாமி

துருக்கி, ஒக். 31



துருக்கி நாட்டின் ஏகன் தீவுகளில் 7.0 ரிச்டர் அளவில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இந்த அதிர்வால், கிரீஸ் நாட்டில் சுனாமி போன்று பேரலை ஏற்பட்டது. பேரலையால் நகருக்குள் கடல்நீர் புகுந்தது. வீதியில் வாகனங்கள் செல்வதுபோன்று கடல்நீர் பொருள்கள், கார்கள் என்பனவற்றை இழுத்துச் சென்றது. பலர் உயிரிழந்துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (து)

# 82 கிலோ கஞ்சா காரைநகரில் மீட்பு

## கடத்தியவர்கள் மூலமாக கொரோனா பரவும் அச்சம்?

யாழ்ப்பாணம், ஒக். 31



யாழ்ப்பாணம் காரைநகர் தோப்புக்காடு பகுதியில் 82 கிலோகிராம் கேரளக் கஞ்சா பொதிகளாக நேற்றிரவு மீட்கப்பட்டன என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று எவரும் கைதுசெய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது பற்றிய விசாரணை தொடர்கின்றது.

மீட்கப்பட்ட கஞ்சாவை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துவராது, கடற்படையினரின் உதவியுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொரோனாப் பரவல் விரிவடைந்து செல்கின்றது. இந்தியாவிலிருந்தும் கொரோனா வரலாம் என்பதால் முற்பாதுகாப்புக்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையிலும், கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டதாக இருப்பின் கடத்தல்கார் மூலமாக கொரோனா பரவலுக்கு வழிவகுக்கலாம். இது நிலைமையை இன்னும் மோசமாக்கும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (து11,25)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




**அமரர் துரையப்பா மயில்வாகனம்**


(ஓய்வு நிலை இலங்கை மின்சார சபை ஊழியர்)

**திதி : பூரணை (31.10.2020)**

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதோ !
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ !
உங்களை நினைத்து -தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் அப்பா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

உங்கள் நினைவுடன் என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



**கந்தையா பாலசுந்தரம்**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுந்தரம் 25.10.2020 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - குணவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், தம்பிஐயா - இராசம்மா தம்பதியரின் மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், ஸ்கந்தகுமார் (பொறியியலாளர் - கனடா), சதீஸ்குமார் (சட்டத்தரணி - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, சுவாமிநாதன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரஜ்னாவின் மாமனும், அஜய்யின் அன்புப் பேரனும், செந்தில்நாதன், தருமராணி, பவானி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கமலவேணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு (கனடா நேரம்) St John's Dixie Cemetery & crematorium, 735, Dundas Ste,Mississauga,onL4Y 2B5,Canada நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

பா. ஸ்கந்தகுமார் (மகன் - +190 527 94868)
பா. சதீஸ்குமார் (மகன் - +164 723 19669)
க.சுவாமிநாதன் குடும்பத்தினர் (077 833 3120)

புதுவளவு, மடத்தடி
மாவிட்டபுரம்.

**உணவகம் வாடகைக்குண்டு**

யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் உள்ள உணவகம் தளபாடங்கள் உட்பட வாடகைக்குண்டு. கிழமை நாட்களில் மாலையில் 5 மணிக்கு பிற்பாடு பார்வையிடமுடியும்.

**தொடர்பு: 077 602 1794**

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வியாபார நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**077 419 5015**

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை**

1.மேசன் 2000.00ரூபா
2.லேபர் 1300.00-1500.00ரூபா
(வேலை தொடங்கும் நேரம் - 8.00A.M-5.45PM)
தேவைப்படின் தினசரி சம்பளம் வழங்கப்படும்


074 002 9658(Dialog) மற்றும்
075 918 3940 (Airtel) (திங்கள்-சனி வரை
8.30AM-5.00PM வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் தில்லை சின்னையா**

(விற்பனைத் திணைக்கள ஓய்வூதியர்)

திதி: அபரபக்கம் (31.10.2020)



**மண்ணில் பிறையாக**
**05.07.1936**

**விண்ணில் நிறைவாக**
**14.11.2016**

விண்மீனாய் வானில் வீற்றிருக்கும் எங்கள்
அன்பான ஐயாவே உயிரே
கண்களிலே கண்ணீர் ததும்ப
எந்நாளும் உங்களைத் தரிசிக்கிறோம்
மண்மீது எங்களை மகிழ்வோடு வாழவைத்த
உங்களை எண்ணாத நாளேயில்லை
பொன்மலர்கள் தூவி பூசிக்கின்றோம் என்றும்.

கவிதாலயா
15, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## வடக்கில்...

புங்குடுதீவு, வேலணை மற்றும் நல்லூரில் தொற்றுடன் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் கடந்த 25ஆம் திகதி இரவு 10 மணியளவில் கொழும்பு புறக்கோட்டையில் இருந்து பஸ்ஸில் புறப்பட்டு, 26ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து இருந்து திரும்பிய இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் அவர்களுக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் தொடர்புகளைப் பேணினர் என்று கருதப்படும் 10 பேர் புங்குடுதீவில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் 4 பேரும் வெள்ளவத்தையில் உள்ள உணவகத்தின் உரிமையாளரும், பணியாளர்களுமாவர். நல்லூரைச் சேர்ந்தவர் உணவகத்தின் உரிமையாளர். ஏனையவர்கள் பணியாளர்கள். இவர்கள் அங்கிருந்து என்.சி.ஜீ. என்ற பஸ்ஸிலேயே யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் உணவகத்துக்கு பேலியகொட மீன் சந்தையில் இருந்தே மீன்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவர்களின் உணவகப் பணியாளர் ஒருவரே அங்கு சென்று அவற்றைக் கொள்வனவு செய்வது வழமை. அந்தப் பணியாளருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பேலியகொட மீன் சந்தையில் மொத்த விற்பனை நிலையம் வைத்திருக்கும் ஒருவரின் மனைவியும், 2 வயது மகனுமே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து தனியான வாகனம் மூலம் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள இருவரும் பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று திரும்பியவர்கள். இவர்கள் அங்குள்ள கடற்றொழில் சமாச அலுவலகத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்குத் தொற்றுள்ளமை தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, மருதங்கேணி கொரோனா சிறப்பு மருத்துவமனையில் தொற்றுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட மூவருக்கு தொடர்ந்தும் கொரோனாத் தொற்று உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ஒ5,26)

## கர்ப்பிணி...

நிலையில், கணவரின் தந்தைக்கு முதலில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரும் அந்த மொத்த விற்பனை நிலையத்திலேயே பணியாற்றுகின்றார். அதையடுத்து கர்ப்பிணி என்பதால் மனைவியையும், மகனையும் தனியான வாகனம் மூலம் உடுவிலுக்கு அனுப்பியிருந்தார் கணவர்.

அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கணவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் உடுவிலுக்கு வந்த கர்ப்பிணிப் பெண்ணும், மகனும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களை அழைத்து வந்த அளவெட்டியைச் சேர்ந்த சாரதியும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். பெண்ணுக்கும், மகனுக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ5)

## முல்லை...

தற்போது ஆராயப்பட்டு வருகின்றது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இன்று தொற்றுடன் இனங்காணப்பட்ட இருவரும் முல்லைத்தீவில் இருந்து கூலர் வாகனத்தில் கடந்த 19ஆம் திகதி பேலியகொட சென்று திரும்பியுள்ளனர். அதன்பின்னர் அதில் ஒருவரின் தந்தை அதே சாரதியுடன் பேலியகொட சென்று 21ஆம் திகதி திரும்பியுள்ளார். அப்போதுதான் பேலியகொட கொரோனா கொத்தணி கண்டுபிடிக்கப்பட்டது.

அதையடுத்து 21ஆம் திகதி மகன் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டார். பேலியகொடவில் இருந்து திரும்பிய தந்தையும் சாரதியும் கடற்றொழில் சமாசத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த 21ஆம் திகதி மகனுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் அறிக்கை நேற்றே கிடைத்துள்ளது. தற்போது கிடைத்த பி.சி.ஆர். முடிவுகளின்படி மகனும், சாரதியுமே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். தந்தை தொற்றுக்குள்ளாகவில்லை. பேலியகொடவில் இருந்து திரும்பிய மகன் இரு தினங்கள் வெளியிடங்களில் நடமாடியுள்ளார். முல்லைத்தீவு நகர் பகுதியிலும் நடமாடியுள்ளார் என்று கூறப்படுகின்றது. அந்த இடங்களை இனங்காணும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் இறங்கியுள்ளனர். (ஒ.5)

## தொற்றாளரோடு...

டன் தொடர்புகளைப் பேணிய 10 பேர் வரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். அதேவேளை தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பைப் பேணிய பட்டதாரிப் பயிலுநர்கள் சிலரும் தனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொற்றுடன் இனங்காணப்பட்டவர்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்துள்ளதால், பஸ்ஸில் பயணித்தவர்கள் மற்றும் அவர்கள் சென்ற இடங்களை இனங்காணும் முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பஸ்ஸில் பயணித்தவர்கள் படகுகளில் தீவகப் பிரதேசங்களுக்குச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுவதால், அது தொடர்பாகவும் கவனம் எடுக்கப்படுகின்றது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-ஒ526)

## தொற்றாளர்...

காகப் பொலநறுவைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பேலியகொட சென்று திரும்பிய வடமராட்சியைச் சேர்ந்த மூவருக்கு கடந்த புதன்கிழமை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதையடுத்து அவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் மூவரும் நேற்று இரவு அம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காகப் பொலநறுவைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-26)

## கொழும்பில்...

ரோஸி சேனாநாயக்க நேற்று தெரிவித்தார். கம்பஹா மாவட்டத்தைத் தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தையும் கொரோனா வைரஸ் மிரட்டி வருவதால் கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான சுமார் 35 கட்டடங்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களாகப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் கொழும்பு மாநகர மேயர் மேலும் கூறினார். (எ-22)

## மின்னல்...

பவம் அம்பாறையில் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் நடந்துள்ளது. சாகாமம், கம்பித்தலாவ பகுதியில் உள்ள தமது காணியில் கச்சான் செய்கையில் ஈடுபட்டிருந்தபோதே மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

திருக்கோயில், விநாயகபுரத்தைச் சேர்ந்த லோகநாயகம் யோகேஸ்வரன் (வயது46), அவரது மனைவி ஜெயசுதா (வயது46) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். இந்தத் தம்பதிக்கு 3 பிள்ளைகள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இருவரது உடல்களும் திருக்கோயில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## கொரோனா 10,000+...

நேற்று மட்டும் 633 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தனிமைப்படுத்தலில் இருந்தவர்களும், சமூகத்தில் இருந்தவர்களுமே தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 424 ஆக உயர்வடைந்துள்ளது.

6 ஆயிரத்து 123 தொற்றாளர்கள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 ஆயிரத்து 282 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 19 பேர் சிகிச்சைகளின் போது உயிரிழந்துள்ளனர். (எ-22)

## யாழ்ப்பாணத்தில்...

கள் நாளை முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் இந்தக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமாகாண உளநல சேவை பணிப்பாளர் கேசவன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஆலயங்களில் குருமார்கள் தவிர்ந்த ஏனையோர் வழிபாடுகளில் பங்கேற்கத் தடை.

அன்னதானம் வழங்கல் உள்ளிட்ட ஏனைய ஆலய செயற்பாடுகளுக்கும் தடை.

வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி செயற்பாட்டை முன்னெடுக்க முடியும்.

திருமண நிகழ்வுகள் வீடுகளில் மாத்திரம் நடத்த முடியும். 50 பேர் மாத்திரமே பங்குகொள்ள முடியும். திருமண மண்டபங்களில் நடத்த முடியாது.

இறுதிச் சடங்குகள் மூன்று நாள்களுக்குள் முடிக்கப்படவேண்டும். ஆகக் கூடியது 50 பேர் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

இரத்த உரித்துடையோர் தவிர ஏனையோர் வெளிமாவட்டங்களிலிருந்து நிகழ்வுகளில் கலந்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்துக்களில் ஆசன எண்ணிக்கைக்கு அமைவாகவே பயணிகளை ஏற்றமுடியும்.

மூ நடைபாதை வியாபாரங்களுக்கு தற்காலிகமாகத் தடைவிதிக்கப்பட் டுள்ளது. மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் மாத்திரம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனை செய்ய முடியும்.

அனைத்து வகையான விளையாட்டு நிகழ்வுகளும் மறுஅறிவித்தல் வரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் ஒன்றுகூடக் கூடிய நிகழ்வுகள், கூட்டங்கள் மறு அறிவித்தல் வரையில் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரையில் தனியார் கல்விநிலையங்கள் மூடப்படவேண்டும். தரம் 1 இற்கான பாடசாலை அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. அதனை சுகாதார நடைமுறைக்கு அமைவாக, பெற்றோர் ஒன்றுகூடாதவாறு முன்னெடுக்க வேண்டும்.

உணவகங்களிலிருந்து உணவுகளை சாப்பிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்கு எடுத்துச் செல்ல முடியும். வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர் தொடர்பான விவரங்களை கிராம அலுவலர்கள் அறிந்திருக்க வேண்டும்.

வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தருவோர் தொடர்பில் கிராம அலுவலருக்கு மக்கள் தெரியப்படுத்தவேண்டும்.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை தங்க வைத்து தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

முடக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அரச அலுவலர்களுக்கு, பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலர் இணைந்து பொருத்தமான மாற்று வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரின் சுற்றறிக்கைக்கு அமைவாக)

குருநகர் மற்றும் பாசையூர் பகுதிகளில் உள்ள மீன் பதனிடல் நிலையங்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது. ஓர் நிறுவனம் மாத்திரமே மீன்களைக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள் கொண்டு செல்ல முடியும்.

இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி ஒருங்கிணைப்பதற்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வாரத்தின் 7 நாள்களும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக திறக்கப்படவுள்ளன. இதற்குரிய ஒருங்கிணைப்பு அலுவகத்தின் தொலைபேசி இலக்கம் 021 222 5000 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,111)

# இயற்கைக்கு எதிரான செயல்கள்! எதிர்காலத்துக்கு பெரும் ஆபத்து

## எச்சரிக்கை விடுக்கும் ஐ.நா.

நியூயோர்க், ஒக்.31
இயற்கைக்கு எதிரான மனிதனின் செயல்கள் வருங்காலத்தில் பல தொற்று நோய்கள் உருவாக வழி வகுக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அது வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் போன்று 8 லட் சத்து 50 ஆயிரம் வகையான வைரஸ்கள் உள்ளன. அவை விலங் குகளிடம் உள்ளன. அவை மனிதர் களைத்தாக்கக்கூடும். இயற்கைக்கு எதிரான மனிதனின் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பல தொற்று நோய் கள் உருவாக வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)






# அமெரிக்காவை புரட்டியெடுத்த 'ஜீட்டா'

நியூயோர்க், ஒக்.31
அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியைத் தாக்கிய ஜீட்டா சூறாவளி காரணமாக குறைந்தது ஆறு பேர் உயிரிழந்துள்ளனர், 2 மில்லியனுக்கும் அதிகமானோர் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜீட்டா சூறாவளியால் ஏற்பட்ட சேதத்தையடுத்து மீட்பு மற்றும் அவசர குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. ஜீட்டா சூறாவளி லூசியானாவின் கடற்கரையில் 110 மைல் வேகத்தில் வீசியது.

இந்த ஆண்டு லூசியானாவைத் தாக்கிய ஐந்தாவது புயலாக ஜீட்டா பெயரிடப்பட்டுள்ளது. (வ-இ)




# போராட்டத்தை அடக்குவதற்கு பிலடெல்பியாவில் ஊரடங்கு

அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கறுப்பின இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த இரண்டு நாள்களாக அங்கு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலவரங்கள் இடம்பெற்று வந்தன.

இந் நிலையிலேயே அந்த நகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட் டுள்ளது. கொல்லப்பட்ட வோல்டர் வொல்லஸ் மனநலம் பாதிக் கப்பட்டு இருந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள் ளனர். ஆனால் அவர் கையில் வைத்திருந்த கத்தியை கீழே போட மறுத்ததை அடுத்தே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட் டக்காரர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதோடு நகரின் வர்த்தக நிலையங்களும் கொள்ளையிடிக்கப்பட்டன. (வ-இ)

# முருகனுக்கு கொரோனா?



சென்னை, ஒக்.31
ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன் 4 நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட் டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

எனினும் முருகன் உடல் நலத்துடன் உள்ளார் எனவும் அவருக்கு கொரோனா தொடர்பான எந்தப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். (வ-இ)

பிரான்ஸ்க்கு எதிராக கருத்து

# மலேசிய முன்னாள் பிரதமரின் ருவிட்டர் பதிவுகள் நீக்கம்

பிரான்ஸில் நைஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற கத்திக் குத்துத் தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மலேசிய முன்னாள் பிரதமர் மகாதிர் முஹமது பதிவை ருவிட்டர் நீக் கியுள்ளது.

அவர் தனது பதிவில் வெவ்வேறு கலாசாரத்தையும் மதிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் தன்னுடைய மேற்கத் திய நடைமுறை, மதிப்புகள், வழக்கத்தை திணிக்க முற்படக் கூடாது என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோனை குறிப்பிட்டு கடுமையாகச் சாடினார். மேலும் முஸ்லீம்களுக்கு கோபத்தை வெளிப்படுத்த உரிமையுள் ளது என்றும் பிரான்ஸ் பல மில்லியன் மக்களைக் கொன்று குவித்தது என்றும் பதிவில் குறிப்பிட்டார். அவர் பதிவிட்ட 13 க்கும் அதிகமான பதிவுகளில் சில விதிமீறல் பதிவுகள் எனக் கூறி ருவிட்டர் நிறுவனம் அவற்றை நீக்கி உள்ளது. (வ-இ)






# கொரோனா இன்றி 200 நாள்கள்

## மகிழ்ச்சியில் தாய்வான்

தய்பெய், ஒக்.31
தாய்வானில் இறுதியாக கொரோனாத் தொற்றா ளர் அடையாளம் காணப்பட்டு 200 நாள்கள் கடந்துள்ளது. கொரோனாப் பரவலைக் கட்டுப்ப டுத்துவதில் தாய்வான் சிறப்பாக செயற்பட்டு வரு கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானில் இறுதியாக ஏப்ரல் 12ஆம் திகதி கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப் பட்டார்.

அதன்பின் இதுவரை யாருக்கும் தொற்று உறுதிப் படுத்தப்படவில்லை என அந்நாட்டு நோய்க் கட் டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இதுவரை அந்நாட்டில் 553 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பதுடன் அவர்க ளில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். (வ-இ)

### தொடர்ச்சிகள்.......

#### கொரோனாத் தொற்று...

கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பேருந்துகளில் சாரதிகள், நடத்துநர்களாகப் பணியாற் றும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த திங் கட்கிழமை கண்டறியப்பட்டது.

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்த நிலை யில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார். இந்த நிலை யில் இராஜகிராமத்தில் 60 குடும்பங்கள் சுயதனி மைப்படுத்தப்பட்டுள்ளன. தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பேருந்து சேவை யில் கடமையாற்றினால் பயணிகளுக்கு தொற்று ஏற்படலாம்.

அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடை யோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பஸ்களும் சுகாதாரத் துறையி னரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இடைநிறுத் தப்பட்டுள்ளன. (ம-26,20)

#### 68 பொலிஸ்...

பொலிஸார் அறிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை காலை 5 மணிக்கு 49 பொலிஸ் பிரிவு களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தளர்த் தப்பட்டாலும் ஏனைய 68 பொலிஸ் பிரிவுகளில் ஊர டங்கு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது மேல் மாகாணம் உட்பட நாட்டில் 117 பொலிஸ் பிரிவு களில் நேற்றுமுன்தினம் இரவு முதல் தனிமைப்படுத் தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது.

ஏற்கனவே 68 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்ப டுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த நிலையில் புதிதாக 49 பிரிவுகள் இணைக்கப்பட்டன. கம்பஹா மாவட்டத்தில் 37 பொலிஸ் பிரிவுகளிலும் கொழும்பு மாவட்டத்தில் 21 பொலிஸ் பிரிவுகளிலும், களுத்துறை மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவுகளிலும், குருணாகல் மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். திங்கட்கிழமை இந்தப் பகுதிகளில் தனி மைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படாது.

புதிதாக இணைக்கப்பட்ட 49 பிரிவுகளில் நீக்கப்படும். அதுவும் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளிலேயே இறுதித் தீர்மானம் தங்கியுள்ளது. என்றார். (எ-ம-44)

#### யாழ்ப்பாணம்...

இருந்து வருவோரில் பலருக்குக் கொரோனாத் தொற் றுள்ளமை கண்டறியப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாண ஆளுநரால் இந்த அவசர அறிவிப்பு விடுக் கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் இருந்து அல்லது வெளி மாவட்டங்களில் இருந்து வருவோர் தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்வதுடன், அது தொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்க வேண்டும் என் றும் கோரப்பட்டுள்ளது. (எ)

# கெயிலின் அதிரடி ஆட்டம் வீண்
# பஞ்சாப்பை வீழ்த்தியது ராஜஸ்தான்







அபுதாபி,ஒக்.31

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் நேற்று நடைபெற்ற 50ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது. அபுதாபியில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி களத் தடுப்பைத்தெரிவுசெய்தது. பஞ்சாப் அணிக்கு அணித்தலைவர் கே.எல். ராகுல் , மன்தீப் சிங் இணை ஆரம்பம் வழங்கியது. எதிர்கொண்ட முதல் பந்தி லேயே பவிலியன் திரும்பினார் மன்தீப். 2ஆவது விக்கெட்டுக்காக ராகுலுடன் ஜோடி சேர்ந்தார் அதிரடி மன்னன் கிறிஸ் கெயில். இருவரும் அதிரடியை கையிலெடுக்க ஆரம்பம் முதலே பந்துகள் பவுண்டரி எல்லை தாண்டிச் சென்றுவந்தன.

ஒருபுறம் கிறிஸ் கெயில் அரைச்சதம் கடந்து இணைப்பாட்டமாக 120 ஓட்டங்களைப் பெறப்பட்ட வேளை மறுபுறம் கே.எல். ராகுல் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த பூரான் தனக்கேயுரிய பாணியில் 10 பந்துகளில் 22 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்க பந்துகளை தெறிக்கவிட்ட கெயில் 63 பந்துகளில் 8 சிக்ஸர்கள் 6 பவுண்டரிகள் அடங்கலாக 99 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்து ஒரு ஓட்டத்தால் சதத்தை தவறவிட்டார். இது அவர் ஒரு ஓட்டத்தால் சதத்தைத் தவறவிடும் இரண்டாவது சந்தர்ப்பமாகும். இறுதியில் பஞ்சாப் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மக்ஸ்வெல்(6),தீபக் கூடா(1) ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் ஸ்ரோக்ஸ்,ஆர்ச்சர் தலா இரண்டு விக்கெட்களை கைப்பற்றினர்.

186 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணிக்கு உத்தப்பா , பென் ஸ்ரோக்ஸ் இணை ஆரம்பம் வழங்கியது. ஆரம்பம் முதலே அதிரடி காட்டிய ஸ்ரோக்ஸ் 26 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 6 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்க தொடர்ந்து களம் புகுந்த சாம்சன் உத்தப்பாவுடன் இணைந்து அரைச்சத இணைப்பாட்டத்தை பகிர்ந்த வேளை உத்தப்பா 30 ஓட்டங்களுடன் நடையைக்கட்டினார். அதிரடியாக ஆடிய சாம்சனும் 48 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

மத்திய வரிசையில் ஸ்மித், பட்லர் ஜொலிக்க 2.3 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருக்க 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது ராஜஸ்தான். துடுப்பாட்டத்தில் ஸ்மித்(31), பட்லர்(22) ஓட்டங்களையும் பந்துவீச்சில் முருகன் அஸ்வின், ஜோர்தான் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக பென் ஸ்ரோக்ஸ் தெரிவு செய்யப்பட்டார். இவ் வெற்றியின் மூலம் பிளேஒவ் வாய்ப்பை தக்கவைத்தது ராஜஸ்தான் அணி. இன்றைய போட்டியில் டெல்லி கெப்பிடல்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் டுபாய் மைதானத்திலும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் ,சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் சார்ஜா மைதானத்திலும் பலப்பரீட்சை நடத்துகின்றன. (ரி-4)

**செய்து தரப்படும்**

வயறிங், பிளம்பிங், CCTV கமரா பொருத்தல் போன்ற வேலைகள் செய்து தரப்படும்.

தொடர்பு: 076 862 2328

**ENGLISH CLASSES**

**Grade 1 to O/L**

வீடுவந்து கற்பிக்கப்படும்.

Grammer with syllabus

077 331 4608

**தேவை**

20L கொள்ளவுடைய எண்ணெய் வெற்று கொள்கலன் கொள்வனவு செய்யப்படும்.

இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 285 0408

**A/L Physics**

**Day Classes**

ஆரம்பம்: 01.11.2020- Sun
7 PM-9 PM

A/L 2021,A/L 2022

வகுப்புகளும் நடைபெறுகின்றன

Personal Class, Group Class

ஆகவும் கற்கலாம்

ஆசிரியர்:
திரு.M.ஸ்பெல்மன்
(Bsc,PGDE)
Jaffna Town
தொடர்புகளுக்கு:
0776116724

அனைத்து வகுப்புகளும் ZOOM னூடாக 7நாட்களும் நடைபெறும்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கரந்தன் ராசாகடை வீதியில் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பின் விலை நாலு லச்சத்து ஐம்பதாயிரம் ரூபா (450 000/-) பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.

தொடர்பு:
077 109 3479

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கரந்தன் நீர்வேலி மேற்கு ராசாகடை அருகாமையில் $8\frac{1}{2}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பின் விலை 8 லச்சம் ரூபா (800 000/-) பிரித்து கொடுக்கப்படும் $1\frac{1}{2}$ பரப்பாக. தரகர் தேவையில்லை

தொடர்பு:
077 623 4204

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஊரெழு ஆனந்தகானம் ராசா கடை வீதியில் 44 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
1 பரப்பின் விலை 4 லச்சம் ரூபா (400 000/-) பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக.
தரகர் தேவையில்லை

தொடர்பு:
077 998 6806, 076 888 4625

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: குரு
077 805 1655, 076 6400 974

**NEW SCIENCE HALL JAFFNA**

ZOOM CLASSES

* English Medium Physics

**2022-Hydro static**

**2021-Electricity**

Time Table

| Days | Time |
|---|---|
| Mon Tue Thu Sat Sun | 7.30-9.30 AM 2022 |
| Mon Tue Thu Sat Sun | 9.30-11.30 AM 2021 |

M.Kuganeswaran Bsc (Hons), Dip.Edu

CONTACT- 076 569 3006

**தேவை**

முகாமையாளர்

**யாழ் நகரில் உள்ள ஆர்.வி.ஜி மெடிக்கலுக்கு** சிறுவர்களுக்கான ஆடைகள், புடைவைகள், அழகு சாதனப் பொருட்கள், பலசரக்கு பொருட்கள் விற்பனையில் அனுபவமும் கணக்கு அனுபவமும் உள்ள O/L சித்தியடைந்த நம்பிக்கையான ஆண் தேவை. சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

விற்பனையாளர்

சிறுவர்களுக்கான ஆடைகள், அழகுசாதனப் பொருட்கள், பலசரக்குப்பொருட்கள் விற்பன்னயில் அனுபவமுள்ள பெண்களும் ஏனைய பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :

ஆர்.வி.ஜி கம்பனி,
வ.வ.இராமசாமிப்பிள்ளை அன்சன்ஸ்
இல:58 நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 6806



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.